தரம் 5 - 11 வரை

எண்: 06 எழுத்து: 07
ஜூலை 2012

19 JUL 2012

# AHARAM
# அகரம்



## தயார்படுத்தலும் தகுதிப்படுத்தலும்

### ஷஃபான் முதல் ஈத் வரை



## இஸாம் அல் அத்தார்

Des: Sinan

மாதாந்த சிறுவர் சஞ்சிகை


40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஃபானை பயன்படுத்துவோம்;
# ரமழானை வரவேற்போம்

- இஸ்லாமிய மாதங்களில் ரஜப் மாதத்திற்கு அடுத்ததாகவும் ரமழானுக்கு முந்தியதாகவும் காணப்படும் 8வது மாதமே ஷஃபான் ஆகும்.
- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக உஸாமா பின் ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.


ரஜப், ரமழான் ஆகிய மாதங்களுக்கிடையே வரும் ஷஃபான் மாதத்தில் மக்கள் பொடுபோக்காக இருக்கின்றனர். அம் மாதத்தில்தான் மனிதர்களின் செயல்கள் அல்லாஹ்விடத்தில் எடுத்துக் காண்பிக்கப்பட்டு உயர்த்தப்படுகின்றன. என்னுடைய செயல்கள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்படுவதை விரும்புகிறேன். (நஸாஈ)



- ரமழான் மாதத்தை தவிர வேறு எந்த மாதத்திலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முழுமையாக நோன்பு வைத்ததை நான் பார்த்ததில்லை. மேலும் ஷஃபான் மாதத்தில் அன்னார் அதிகமாக நோன்பு நோற்றது போல வேறு எந்த மாதத்திலும் அதிகமாக நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (அல் புகாரி, முஸ்லிம்)

- ஷஃபானில் நபியவர்கள் அதிகமதிகம் நல்லறங்கள் புரிந்துள்ளார்கள். நற்செயல்களில் அதிகம் ஈடுபடுமாறு ஆர்வமூட்டியுள்ளார்கள்.

எனவே, நாமும் ஷஃபான் மாதத்தை சிறப்பாகப் பயன்படுத்த சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்வோம்.



facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகரம்

எண்: 06 ஜுலை, 2012 எழுத்து: 07


**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
ஏ.ஏ.முஹம்மத் பவாஸ் (இஸ்லாஹி)



**சந்தா விபரம்**
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-



தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு – 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com
www.facebook.com/aharamJmf


## உள்ளே...







14



12


கல்விப் பாடப் புறச் செயற்பாடுகளிலும் கவனம் தேவை 28

தயார்படுத்தலும் தகுதிப்படுத்தலும் ஷஃபான் முதல் ஈத் வரை 20


08



37

**பாடத்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | 17 | தமிழ் | 23 |
| விஞ்ஞானம் | 31 | புலமைப் பரிசில் | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய உள்ளமும் தீட்சண்யப் பார்வையும் வேண்டும்

அகரம் உங்கள் கரம் தவழும் பொழுது இரண்டாம் தவணைப் பரீட்சை, ரமழான் நோன்பு என்பன அண்மித்த காலமாக இருக்கும் என்றே நம்புகின்றோம், இன்ஷா அல்லாஹ்.

தவணைகள் ஓடுவதும் வருடங்கள் மாறுவதும்தான் வாழ்க்கை என்ற கருத்து மாணவ சமூகத்தில் ஆழமாகவே பதிந்துவிட்டது போலவே உள்ளது. படிக்க வேண்டும்; பரீட்சையில் புள்ளிகள் பெற வேண்டும். அப்போதுதான் வகுப்பேற்றப்படுவேன் என்ற மனோநிலை மாணவர் மத்தியில் ஒரு காலத்திலிருந்தது. ஆனால் அதுவும் இன்றில்லாத நிலையால், ஒரு வாயிலால் வகுப்பறைக்கு சென்று மறு வாயிலால் இன்னுமொரு வகுப்பறைக்கு செல்வதே வகுப்பேற்றம் என்று அழைக்கப்படும் நிலை வந்துவிட்டது; நம் நாட்டின் கல்விக் கொள்கையைப் போலவே.

பரீட்சைகளுக்காக படிக்கும் கலாசாரம் மாற வேண்டும். கற்கும் கலாசாரம் உருவாக வேண்டும் அல்லது தோற்றுவிக்கப்பட வேண்டும். அதுவே வெற்றி இலக்கை அடைய வழி செய்யும். பரீட்சை மையப் படிப்பு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப படிக்க வைத்துள்ளது. அரைத்த மாவை அரைக்கும் சங்கதிதான் கல்விப் புலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அது கற்றல் நிகழ்வதைத் தடுத்தே விட்டது.

மாணவ சமூகம் தமது எதிர்கால வாழ்வு குறித்து ஆழமாக சிந்தித்துணர கடமைப்பட்டுள்ளது. தாம் வாழும் சூழல் ஏற்படுத்தும் பிழையான சிந்தனைகள், பதிவுகள் விளைவித்திடும் பேராபத்துக்கள் பற்றியும் அவர்கள் உன்னிப்புடன் அவதானம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். ஜாஹிலிய்ய சக்திகள் உள வாழ்வையும் உலக வாழ்வையும் மாசுபடுத்துவதற்காக சத்தமில்லாத ஆரவாரமில்லாத ரத்தம் சிந்தாத உலகப் போரொன்றைத் தொடுத்துவிட்டுள்ளன.

நாளுக்கு நாள் நடத்தைகள் மோசமாகிய வண்ணமே உள்ளன. இளைய சமூகத்தின் சீர்கேடு பற்றியதாகவே சிறிய, பெரிய கூட்டங்களின் பேசு பொருள் அமைந்துவிட்டது. விரசம், ஆபாசம் என்பனவே பேரின்ப சுகம் எனும் மனோநிலை மாணவர் மத்தியில் தோன்றியிருக்கின்றது. கேள்வி, பார்வை, பேச்சு, சிந்தனை எதுவென்று ஒரு கணம் சிந்தியுங்கள். மரணம் உண்டென்று நம்பினாலும் அது வெகு தொலைவிலுள்ளது என்றுதானே கருதுகின்றோம்!

எதிர்கால, தூர, தீட்சண்யப் பார்வை தொலைந்து விட்டது. கண் முன்னால் தோன்றும் அற்புதங்களுக்குப் பின்னால் அலையும் அவலம் கவலை கொள்ளச் செய்கின்றது. வாழ்வு, நாம் வாழும் நாடு, அதன் தற்கால, எதிர்கால போக்கு என்பன குறித்த சிந்தனை தொலைந்தே போய்விட்டதா? மரணம், மரணத்திற்குப் பின்னால் உள்ள வாழ்வு மறந்து போய் விட்டதா? ஒரு கணம் நில்லுங்கள்! அல்லாமா இக்பாலின் வரிகளைக் கேளுங்கள்!

உள்ளத்தின் சோகப் பெரு மூச்சின் வேதனையை
இளைஞர்களுக்கு அளிப்பாயாக!
எனது அன்பையும் ஆழமான தீட்சண்யப் பார்வையையும்
அவர்களுக்கு கொடுப்பாயாக!
எனது அதிகாலைப் புலம்பலை இளைஞர்களுக்கு கொடுப்பாயாக!
இளம் ராஜாளிக் குஞ்சுகளுக்கு மீண்டும் இறக்கையைக் கொடு!
இறைவா எனக்கு ஒரே ஆவல்
எல்லோருக்கும்
எனது தீட்சண்யப் பார்வையைக் கொடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழும் அற்புதம் அல்குர்ஆன்

# அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

# கப்பல் கட்டிய நபி

***அதற்கு மறுமொழியாக நூஹ் கூறினார்:*** “அல்லாஹ் நாடினால் அவனே அதனை உங்களிடம் கொண்டு வருவான். (அது வந்துவிட்டால்) அதனைத் தடுத்து நிறுத்தும் அளவுக்கு நீங்கள் வலிமையுடையவர்கள் அல்லர். உங்களை வழிகேட்டில் ஆழ்த்திட வேண்டுமென்று அல்லாஹ் நாடியிருந்தால், உங்களின் நன்மைக்காக நான் எது கூறினாலும் அது உங்களுக்கு எவ்விதப் பலனையும் அளிக்க மாட்டாது. அவன்தான் உங்கள் இறைவன்; அவன் பக்கமே நீங்கள் திரும்பிக் கொண்டு செல்லப்படுவீர்கள்.”

“இதனை இவரே சுயமாகப் புனைந்துள்ளார்” என்று (நபியே) இவர்கள் கூறுகின்றார்களா? நீர் கூறும்: “நானே இதனைச் சுயமாகப் புனைந்திருந்தால் அந்தக் குற்றத்திற்கு நானே பொறுப்பாளியாவேன். ஆனால், நீங்கள் செய்யும் குற்றங்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல.”

மேலும், நூஹுக்கு இவ்வாறு வஹி அனுப்பப்பட்டது: “உம்முடைய சமுதாயத்தினரில் எவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்களோ அவர்களைத் தவிர, இனி வேறெவரும் நம்பிக்கை கொள்ளப் போவதில்லை. எனவே, அவர்களின் தவறான செயல்களுக்காக நீர் துயரப்பட வேண்டாம். மேலும், நமது கண்காணிப்பில் நம் கட்டளைக்கேற்ப ஒரு கப்பலைக் கட்டத் தொடங்குவீராக! மேலும், அநீதி இழைத்தவர்களுக்காக என்னிடம் பரிந்துரை செய்யாதீர்! அவர்கள் அனைவரும் மூழ்கடிக்கப்படுபவர்களேயாவர்.”

நூஹ் கப்பலைக் கட்டிக் கொண்டிருந்தார். அவருடைய சமுதாயத் தலைவர்களில் எவரேனும் அவரைக் கடந்து செல்லும்போதெல்லாம் அவரை ஏளனம் செய்தனர். அதற்கு அவர் கூறினார்:

“நீங்கள் எங்களைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்கின்றீர்கள். நீங்கள் சிரிப்பது போன்று நாங்களும் உங்களைக் குறித்து சிரித்துக் கொண்டிருக்கிறோம்! இழிவுபடுத்தக்கூடிய வேதனைக்கு யார் ஆளாகப் போகின்றார் என்பதையும் தடுத்து நிறுத்த முடியாத வேதனை யார் மீது இறங்கப் போகின்றது என்பதையும் வெகு விரைவில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.”

இறுதியில் நம்முடைய கட்டளை வந்துவிட்டது. மேலும் அந்த உலை அடுப்பு பொங்கியது. அப்போது நாம் கூறினோம்: “எல்லா வகையான பிராணிகளிலிருந்தும் ஒவ்வொரு சோடியை இக்கப்பலில் ஏற்றிக்கொள்வீராக! உம்முடைய குடும்பத்தினரையும் -யாரைக் குறித்து முன்னரே கூறப்பட்டு விட்டதோ அவர்களைத் தவிர- அதில் ஏற்றிக் கொள்வீராக! மேலும், யார் யாரெல்லாம் இறைநம்பிக்கை கொண்டுள்ளார்களோ அவர்களையும் (ஏற்றிக் கொள்வீராக!)” மேலும், நூஹுடன் இறைநம்பிக்கை கொண்டிருந்தவர்கள் குறைவாகவே இருந்தார்கள்.

மேலும், நூஹ் கூறினார்: “இதில் ஏறிக் கொள்ளுங்கள்! இது செல்வதும் நிலைகொள்வதும் அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டே ஆகும். திண்ணமாக, என் அதிபதி பெரிதும் மன்னிப்பு வழங்குபவனாகவும் கருணை பொழிபவனாகவும் இருக்கின்றான்.”

அக்கப்பல் அவர்களைச் சுமந்து சென்று கொண்டிருந்தது. அலைகள் ஒவ்வொன்றும் மலைபோல் உயர்ந்து கொண்டிருந்தன. நூஹுடைய மகன் தொலைவில் இருந்தான். அவர் தம் மகனை கூவியழைத்துக் கூறினார்: “என் அன்பு மகனே! எங்களோடு நீயும் ஏறிக்கொள்; நிராகரிப்பாளர்களுடன் இருக்காதே!”

அதற்கு அவன் பதிலளித்தான்: “நான் இப்போதே ஒரு மலையின் மீது ஏறிக்கொள்கின்றேன்; அது என்னை வெள்ளத்திலிருந்து காப்பாற்றிவிடும்.”

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்முகத்தோடு சந்திப்போம்

عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ لِي رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:
لاَ تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوْفِ شَيْئًا وَلَوْ أَنْ تَلْقَى أَخَاكَ بِوَجْهٍ طَلِيْقٍ (رَوَاهُ مُسْلِمٌ)

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ தர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எந்தவொரு நன்மையையும் குறைவாக எடைபோட்டு விடாதீர்கள். உங்களுடைய சகோதரரை மலர்ந்த முகத்தோடு சந்திப்பதானாலும் சரியே!" (முஸ்லிம்)**

எமது சகோதரர்களுக்கு மத்தியில் நல்ல பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கான ஓர் அம்சமாகவே ஒருவர் மற்றவரை சந்தித்து உறவாடுவது காணப்படுகின்றது. எம்மத்தியில் காணப்படுகின்ற உறவையும் அன்பையும் வளர்ப்பதில் இவ்வாறான சந்திப்புகள் பெரும் பங்காற்றுகின்றன.

எமது சகோதரர்களை நாம் ஒவ்வொரு முறை சந்திக்கின்றபோதும் அந்த சந்திப்பு இஸ்லாம் வழிகாட்டிய முறையில் அன்பினை பிரதிபலிக்கக்கூடியதாகவும் உறவினை வளப்படுத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும். மாற்றமாக, எமது சந்திப்புக்கள் கடும் சொற்களாலும் கெட்ட வார்த்தை, கேலி மற்றும் அவமரியாதை போன்ற தீய நடத்தைகளுக்கு உட்பட்டதாகவும் இருந்து விடக் கூடாது. ஏனெனில் கடும் சொல், அலட்சிய மனோபாவம், அன்பு கொள்ளாத குணம் போன்றவை எந்த மனிதனுடைய உள்ளத்தையும் இலகுவில் நோகடிக்கக் கூடியவையாகும்.

எமது சந்திப்புக்களின்போது எள்ளளவும் இத்தகைய எண்ணங்கள் தலைகாட்டிவிடாமல் கவனமாக நடந்து கொள்வது அவசியம். ஏனெனில், மாணவர்களாகிய எம் போன்றவர்களின் நடைமுறைகளில் இன்று இத்தகைய விடயங்கள் மேலோங்கிக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. நாம் ஒருமுறை ஒருவரை சந்தித்து விட்டு வந்தால் மீண்டும் சந்திப்பதற்கு விரும்பாத ஒரு நிலையிலேயே பிரிந்து செல்கின்ற அளவுக்கு அநாகரிகங்களும் அலட்சியங்களும் மலிந்ததாக எமது உரையாடல் அமைகின்றது.

எமது சந்திப்பு, பேச்சு, மென்சொற்களாகவும் இன்சொற்களாகவும் இருக்க வேண்டும். இது தான் உலகுக்கு ஒரு முன்மாதிரி சமூகத்தினை விட்டுச் சென்ற நபியவர்களின் வழிகாட்டலாக அமைகிறது. அதேபோன்று நாம் ஒருவரை சந்திக்கின்றபோது அவரைப் பார்த்து புன்னகைப்பது நாம் கடைபிடிக்க வேண்டிய மற்றுமொரு விடயமாகும்.

வேண்டா வெறுப்பாக சந்திப்பது, வேறு வழியில்லை என்று அலட்சியத்தோடு சந்திப்பது போன்றன எமது சந்திப்புக்களின்போது முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டியவையாகும். ஒருவரை ஒருவர் சந்தித்தல் என்ற ஒரு சிறிய சமூக நடைமுறை சம்பந்தமாக மிக அழகிய வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் இஸ்லாம் எமக்கு காட்டித் தந்துள்ளது. அதனடிப்படையில் நாமும் எமது அன்றாட வாழ்க்கையை தூய்மையாக ஒழுங்கமைத்து அல்லாஹ்வின் அன்பையும் சுவனத்தையும் பரிசாகப் பெற்றுக் கொள்ளத் தயாராகுவோம், இன்ஷா அல்லாஹ். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்களும் ஸஹாபாக்களும் யுத்தத் திற்குத் தயாராகி வந்த நிகழ்வல்ல பத்ர். வர்த்தகத்தை முடித்துவிட்டு மக்கா திரும்பும் வியாபாரக் கூட்டத்தைத் தாக்குவதற்காக புறப்பட்டு வந்த சிறிய படையினர், எதிர்பாராத விதமாக மக்காவின் படையினரை எதிர்கொள்ள வேண்டி வந்த திடீர் நிகழ்வே பத்ர். எனவே, முஸ் லிம்களிடம் யுத்தத்திற்கான போதிய தயார்படுத் தல்கள் இருக்கவில்லை. இதனால்தான் ஆரம்பத் திலேயே நபியவர்கள் யுத்தம் செய்வதா, இல்லையா என ஸஹாபிகளிடம் ஆலோசனை கேட்டபோது ஸஹாபிகள் யுத்தம் புரிவதில் தமது ஆர்வத்தை யும் ஆசையையும் அவாவையும் வெளிப்படுத்தி யதாலேயே நபிகளார் தொடர்ந்தும் பத்ர் வரை முன்னேறி வந்தார்கள் என்பதையும் நாம் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

வெற்றி குறித்து முஸ்லிம்கள் நம்பிக்கை இழக் கவில்லை. ஆனாலும் வெற்றிக்கான முழுமையான தயார்படுத்தல் இல்லாததால் பாதுகாப்பு பற்றியும் கரிசனை செலுத்த வேண்டியிருந்தது. எனவே, ஸஹாபிகள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது கொண்ட அளவிலா அன்பின் காரணமாக இஸ்லாத்திற்காகவும் நபிய வர்களைப் பாதுகாப்பதற்காகவும் தமது இன்னு யிரைக்கூட இழக்கத் தயாராக இருந்தார்கள்.

அப்போது ஸஅது இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்களுக்காக உயரமான ஒரு பரணி அமைத்துத் தருகிறோம். அதில் நீங்கள் தங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான வாகனங்களையும் அதற்கருகில் ஏற்பாடு செய்கிறோம். பின்பு நாளை எதிரிகளை நாங்கள் சந்திக்கும்போது அல்லாஹ் நம்மை மிகைக்க வைத்தால் -நமக்கு வெற்றி அளித்தால்- அது நாம் விரும்பியவாறே நடந்ததாக இருக்கட்டும்.

இல்லை, அதற்கு மாற்றமாக ஏதாவது நடந்தால் நீங்கள் இந்த வாகனத்தில் அமர்ந்து எங்களுக்குப் பின்னுள்ள எங்களது கூட்டத்தினரிடம் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லாஹ்வின் தூதரே! இன்னும் பலர் இங்கு வரவில்லை. எங்களைவிட அவர்கள் உங்களை அதிகம் நேசிக்கக் கூடியவர்கள். நீங்கள் போரைச் சந்திப்பீர்கள் என்று அவர்களுக்குத் தெரிந்திருந் தால் உங்களை விட்டு ஒருபோதும் அவர்கள் பின்தங்கியிருக்க மாட்டார்கள். அவர்களிடம் நீங்கள் சென்றால் அவர்கள் மூலம் அல்லாஹ் உங்களைப் பாதுகாப்பான். அவர்கள் உங்களிடம் உண்மையுடன் நடந்து, உங்களுக்கு ஆதரவாக போரும் புரிவார்கள்."

# ஆலோசனைகளை அங்கீகரித்தலும் பிரார்த்தனையும்

ஸஅது (ரழியல்லாஹு அன்ஹு) அவர்க ளின் இந்த ஆலோசனையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டு, அவரைப் புகழ்ந்து அவருக்காக பிரார்த்தனையும் செய் தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைச் சுற்றி பாதுகாப்பிற்காக ஸஅது இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) தலை மையில் சில அன்சாரி வாலிபர்களின் குழு ஒன்று தேர்வு செய்யப்பட்டது.


பௌதிக ரீதியாக அனைத்து முயற்சிகளும் செய்த பின்னர் இறைவனுடனான தமது பிணைப்பை மென்மேலும் அதிகரிப்பதிலும் அவனிடம் வெற்றி வேண்டிப் பிரார்த்திப்பதிலும் இரவு நேரத் தொழுகையிலும் தம்மை அதிகமதிகம் ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

அதன் பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அங்குள்ள ஒரு மரத்தருகில் தொழுத வர்களாக இரவைக் கழித்தார்கள். முஸ்லிம்களும் மிகுந்த நம்பிக்கையுடனும் மன அமைதியுடனும் காலையில் தங்கள் இறைவனின் நற்செய்திகளைக் கண்கூடாகப் பார்த்துக் கொள்ளலாம் என்ற ஆதரவுடன் இரவைக் கழித்தார்கள்.


(முஸ்லிம், ஸுனனுத் திர்மிதி)

"(நம்பிக்கையாளர்களே! உங்கள் மனம்) சாந்தியடைந்தவர்களாக, சிறியதொரு நித்திரை உங்களைச் சூழ்ந்து கொள்ளும்படி (இறைவன்) செய்ததை நினைத்துப் பாருங்கள்! அன்றி (அது சமயம்) உங்கள் தேகத்தை நீங்கள் சுத்தப்படுத்திக் கொள்வதற்காகவும் உங்களை விட்டு ஷைத்தா னுடைய அசுத்தத்தைப் போக்கி விடுவதற்காக வும் உங்கள் உள்ளங்களைப் பலப்படுத்தி, உங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் (அவனே) வானத்திலிருந்து மழையைப் பொழி யச் செய்தான்." (8: 11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞாயிற்றுத் தொகுதி




**ஞாயிற்றுத் தொகுதி** என்பது சூரியனையும் அதன் ஈர்ப்பு விசையின் கட்டுப்பாட்டில் அமைந்திருக்கும் அனைத்துப் பொருட்களையும் உள்ளடக்கியதாகும். இது சூரியக் குடும்பம், சூரிய மண்டலம் (Solar System) என்றும் அழைக்கப்படுகிறது. ஞாயிற்றுத் தொகுதியானது எட்டுக் கோள்களையும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள 162 உப கோள்களையும் வால் வெள்ளி, எரிகற்கள், விண்கற்கள், விண்துகள்கள், விண் குப்பைகள் இன்னும் அறியப்படாதவை என இலட்சக்கணக்கான பிற பொருட்களையும் கொண்டுள்ளது.

ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களை வரிசைக் கிரமமாகப் பின்வருமாறு ஒழுங்குபடுத்த முடியும்: சூரியனுக்கு மிக அண்மையில் புதன் கோள் (Mercury) காணப்படுகிறது. அதனைத் தொடர்ந்து வெள்ளி (Venus), புவி (Earth), செவ்வாய் (Mars), வியாழன் (Jupiter), சனி (Saturn), யுரேனஸ் (Uranus), நெப்டியூன் (Neptune) ஆகிய கிரகங்கள் காணப்படுகின்றன. புவி ஞாயிற்றுத் தொகுதியில் சூரியனிலிருந்து மூன்றாவது கோளாகவும் நெப்டியூன் சூரியனிலிருந்து கடைசிக் கோளாகவும் அமைந்துள்ளன.

ஆரம்பத்தில் ஞாயிற்றுத் தொகுதியில் புளூட்டோவுடன் (Pluto) ஒன்பது கிரகங்கள் (நவ கிரகங்கள்) இருப்பதாக நம்பப்பட்டது. பாடப் புத்தகங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் அவ்வாறுதான் கற்பிக்கப்பட்டும் வந்தது. என்றாலும் அது கோளுக்குரிய தகுதிகளைப் பெறவில்லை என்ற காரணத்தினால் ஞாயிற்றுத் தொகுதியின் உறுப்பிலிருந்து நீக்கப்பட்டது.

ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் பற்றி விஞ்ஞானிகளிடத்தில் பல முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும் இரண்டு விடயங்களில் அவர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளனர். இற்றைக்கு 4.6 பில்லியன் வருடங்களுக்கு முன்னால் ஞாயிற்றுத் தொகுதி உருவாகியது என்பது முதலாவது; சூரியனுக்கு அண்மையில் காணப்பட்ட வாயுக்கள், தூசு துணிக்கைகள் என்பன ஒன்று சேர்ந்தே ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் உருவாகின என்பது இரண்டாவது. கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஒரு எரிகல்லை வைத்து ஆய்வு செய்து சூரிய மண்டலத்தின் வயது 456 கோடியே 50 இலட்சம் வருடங்களென கணித்துக் கூறியுள்ளனர்.

கிறிஸ்துவுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த தொலமி (Ptolemy) என்பவரின் காலம் முதல், பூமியை மையமாகக் கொண்டே பிற கோள்கள் அனைத்தும் சுற்றிச் சுழல்கின்றன என்ற புவி மையக் கோட்பாடு (Geocentric Theory) முன்வைக்கப்பட்டு வந்தது. கி.பி. 1512இல் நிகலஸ் கோபர்நிகஸ் என்ற அறிவியலாளர் கோள்கள் அனைத்தும் சூரியனை மையமாகக் கொண்டே சுற்றிவருகின்றன என்றும் சூரியனோ சூரிய மண்டலமோ அசையாது ஒரே இடத்தில் நிற்கின்றன என்றும் விளக்கினார். இதனை சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் நகரும் கோட்பாடு (The Heliocentric theory of planetary motion) என அழைக்கின்றனர்.

அதன் பின் 1609 இல் ஜெர்மன் நாட்டவரான கெப்ளர் (Johannes Kepler) என்ற விஞ்ஞானி கோள்கள் யாவும் முட்டை வடிவ (Elliptical Shapes) பாதையில் சூரியனைச் சுற்றி வருவதோடு அவை ஒவ்வொன்றும் தம் அச்சில் ஒழுங்கற்ற வேகத்தில் சுற்றி வருவதாகவும் தனது Astronomia Nova என்ற நூலில் கருத்து வெளியிட்டார்.

கோள்களும் உபகோள்களும் தமக்கே உரிய பாதைகளில் சுற்றி வருகின்றன என்பதனைக் குறிக்கும் விதத்தில் பின்வரும் அல்குர்ஆனிய வசனம் அமைந்துள்ளமையை இங்கு அவதானிக்கலாம்.

"பாதைகளையுடைய வானத்தின் மீது சத்தியமாக"
(51: 7). (85: 1)

"சூரியன் சந்திரனை (நெருங்கிப்) பிடிக்க முடியாது. இரவு பகலை முந்த முடியாது. இவ்வாறு ஒவ்வொன்றும் (தம்) வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன." (36: 40)

"அவனே இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் படைத்தான். ஒவ்வொன்றும் தமது பாதையில் நீந்துகின்றன." (21: 33)

சந்திரன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு பூமியைச் சுற்றி வலம் வருவதுபோன்று, எமது பூமியும் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது. அதேபோன்று தான் இப் பிரம்மாண்டமான ஞாயிற்றுத் தொகுதியும் பிரபஞ்சத்தில் ஓர் இடத்தில் தங்கியிருக்காது கோள்கள், உபகோள்கள், பிற பொருட்கள் அனைத்தையும் சேர்த்து இழுத்துக் கொண்டு தன்னைத்தானே சுற்றுவதோடு ஒரு விண்பொருளை நோக்கி மிக வேகமாக நீந்திச் சென்று கொண்டிருக்கின்றது. செக்கனுக்கு 19Km, மணிக்கு 720 ஆயிரம் மைல் வேகத்தில் "ஹெர்கியுலஸ் - Hercules எனும் நட்சத்திரக் கூட்டத்திலுள்ள "வெகா - Vega" என்ற விண்மீனின் திசையில் எமது ஞாயிற்றுத் தொகுதி சென்று கொண்டிருக்கின்றது. இது ஒரு நாளில் 17,280,000 km தூரம் பிரயாணிக்கின்றது.



ஞாயிற்றுத் தொகுதி செல்லும் இவ்விடத்தை Solar Apex (சூரிய முகடு) என விண்ணியல் விற்பன்னர்கள் பெயரிட்டுள்ளனர். சூரியன் நிர்ணயிக்கப்பட்டதோர் இடத்தை நோக்கிச் (Fixed place) சென்று கொண்டிருப்பதாகவும் அதுவே அதன் கடைசி காலம் என்பதையும் பின்வரும் அல்குர்ஆனிய வசனங்கள் மிக அழகாகக் குறிப்பிடுகின்றன:

"இன்னும் சூரியன் அதற்குரிய இடத்தின்பால் சென்று கொண்டிருக்கின்றது."

(36:38 / 13:2 / 35:13 / 39:5)

சூரியக் குடும்பம் தனது சுற்றுப் பாதையில் ஒரு முறை சுற்றி முடிப்பதற்கு 25 கோடி ஆண்டுகள் செல்கின்றன.

விண்வெளி ஆய்வின் ஆரம்ப கட்டங்களில் ஞாயிற்றுத் தொகுதியில் சனிக்கிரகமே கடைசியானதென 17ம் நூற்றாண்டு வரை நம்பப்பட்டது. அதன் பின் 1781 இல் யுரேனஸும் 1846 இல் நெப்டியூனும் கண்டுபிடிக்கப்பட்டன. இறுதியாக 1930 இல் புளூட்டோவும் ஒரு கோளாகக் கண்டுபிடிக்கப்பட்டது. என்றாலும் புளூட்டோ கிரகமொன்று பெற வேண்டிய தகுதிகளைப் பெறவில்லை என்ற காரணத்தினால் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி கூடப்பட்ட சர்வதேச வானியல் ஒன்றியத்தின் மாநாட்டில் ஞாயிற்றுத் தொகுதியில் அதன் உறுப்புரிமை இரத்துச்செய்யப்பட்டது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பவை எட்டுக் கோள்கள் என்றாலும் இவற்றைத் தவிர இன்னும் பல கோள்கள் எமது ஞாயிற்றுக் குடும்பத்தில் இருப்பதற்கான சான்றுகள் உள்ளதாகவே விண்ணியல் விஞ்ஞானம் நம்புகின்றது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஏ.எம். தாரிக்,
அல்சிராஜ் ம.க. அக்கரைப்பற்று


## தெரிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. | ஆசியாவிலேயே மிகப் பெரிய மிருகக்காட்சி சாலை அமைந்துள்ள இடம் | இந்தியாவின் வண்டலூர் |
| 2. | உலகிலேயே அதிக பள்ளிவாசல்கள் உள்ள நகரம் | இஸ்தான்புல் |
| 3. | எண்ணெயைக் கெட்டியாக்கப் பயன்படுத்தும் வாயு | ஹைட்ரஜன் |
| 4. | முதல் கின்னஸ் புத்தகம் வெளியான ஆண்டு | 1956 |
| 5. | சுரங்கங்களில் காணப்படும் எரிவாயுவின் பெயர் | மெதேன் |

## முதன்மையானவர்கள்

- பெண்களில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்: கதீஜா பின்த் ஹுவைலித் (ரழியல்லாஹு அன்ஹு)
- ஆண்களில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்: அபூ பக்ர் சித்தீக் (ரழியல்லாஹு அன்ஹு)
- சிறுவர்களில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்: அலி இப்னு அபீ தாலிப்
- மதீனாவில் முஹாஜிர்களுக்கு பிறந்த முதலாவது குழந்தை: அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு)
- அல்லாஹ்வின் பாதையில் முதலாவது ஈட்டி எறிந்தவர்: ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
- அல்லாஹ்வின் பாதையில் முதலாவது வாளேந்தியவர்: ஸுபைர் இப்னு அவ்வாம் (ரழியல்லாஹு அன்ஹு)
- இஸ்லாத்தின் முதலாவது தூதுவர்: முஸ்அப் இப்னு உமைர் (ரழியல்லாஹு அன்ஹு)
- கொலை செய்யப்பட முன் இரண்டு ரகஆத் சுன்னத் தொழுதவர்: ஹுபைப் இப்னு அதிய் (ரழியல்லாஹு அன்ஹு)
- அல்குர்ஆனின் எழுத்துக்கு மேலால் நுக்தா வைத்தவர்: அபுல் அஸ்வத் அத்துவலி

எம்.பீ.எப். ரிஸ்னா - தரம் 11
க/உடபிடிய அல்ஹுஸ்னா மு.ம.வி.
பள்ளேகம, தெல்தோட்டை



## பொறுமை பற்றி கூறும் குர்ஆன் வசனங்கள்

1. உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக் கொண்டு (பொறுமையுடன்) இருப்பீராக! (18: 28)
2. (எத்தகைய கஷ்டத்திலும்) நீங்கள் பொறுமையைக் கைக்கொண்டு தொழுது (இறைவனிடத்தில்) உதவி தேடுங்கள். ஆனால், நிச்சயமாக இது உள்ளச்சமுடையவர்களுக்கே அன்றி (மற்றவர்களுக்கு) மிகப் பளுவாகவே இருக்கும். (2: 45)
3. நம்பிக்கையாளர்களே! (நீங்கள் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவதற்காக) பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (2: 153)
4. நம்பிக்கையாளர்களே! நீங்கள் பொறுமையைக் கடைபிடியுங்கள். ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள். (எதிரியை எதிர்க்க) எந்நேரமும் தயாராக இருங்கள். அல்லாஹ்வுக்கு பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நீங்கள் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவீர்கள். (3: 200)

எம்.ஆர். பாத்திமா பர்ஸியா
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க,
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுதான் வேண்டும்



**என்னைக் கவர்ந்த சிறுகதை**

ஒரு வியாபாரி பூனைக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு என்ற அறிவித்தலை தனது கடைக்கு முன்னால் தொங்க் விட்டு இருந்தான். பெற்றோருடன் கடைத் தெருவுக்கு பொருள் வாங்க வரும் பிள்ளைகளையும் அவர்களது பெற்றோர்களையும் தனது கடைக்குள் கவர்ந்திழுப்பதே அவனது நோக்கமாக இருந்தது.

இவ்வறிவித்தலைக் கணட சிறுவன் ஒருவன் தனியே கடைக்குள் நுழைந்து ஐயா பூனைகளை பார்க்கலாமா? எனக் கேட்டான். கடைக்காரர் பூனைக் குட்டிகள் இருக்கும் இடத்தைக் காட்டினார். பஞ்சு போன்ற மிருதுவான சில குட்டிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.

இவை நல்ல ஜாதிப் பூனைகள். குட்டி ஒன்று ரூபா 100 என்றார் கடைக்காரர். அவற்றுள் ஒரு பூனை நடக்க முடியாமல் பின் காலை இழுத்தவாறு சிரமப்பட்டு நகர முயல்வதைக் கண்டான் சிறுவன். ரூபா 100 தருகிறேன் அந்தக் குட்டியைத் தருகிறீர்களா? என அதனைக் காட்டியவாறு கேட்டான். தம்பி! அதற்கு பிறப்பிலேயே கால் ஊனம். அதனால் எந்தப் பிரயோசனம் இருக்காது என அறிவுறுத்தினார் கடைக்காரர்.

இல்லை! எனக்கு அந்தப் பூனைக் குட்டிதான் வேண்டும். நீங்கள் விலையைக் குறைக்கக் கூடாது என உறுதியாகக் கூறினான் சிறுவன்.

ஒன்றும் புரியாத கடைக்காரர் அந்தப்பூனையைக் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொண்டார். குழப்பம டைந்த கடைக்காரர் கேட்டார்: ஏன் தம்பி இப்படி இந்தப் பூனைக் குட்டியே வேண்டும் என அடம்பிடித்தாய்?

சிறுவன் ஒன்றும் பேசாது தனது காற்சட்டையை உயர்த்திக் காட்டினான். அவனது வலது கால் ஊனமுற்று இருப்பதைக் கண்டார் கடைக்காரர். காலில் இரும்பு பூட்டு பூட்டப்பட்டிருந்தது. அவனை நிலைநிறுத்த பூட்டு உதவுவதையும் கண்டார். உன்னைப்போன்ற கருணையுள்ள எஜமான் கிடைக்கட்டும் என்றவாறு கண்ணீரைத் துடைத்தார் கடைக்காரர்.

*எம்.ஏ.எப். அஸ்கா - தரம் 08*
*வெம்பொடை மு.ம.வி.*

## விடுகதைகள்

*1. சீருடை இல்லாத காவலாளி; சம்பளம் கேட்காத காவலாளி. அவன் யார்? நாய்*

*2. மின்சாரம் இல்லாத நேரத்திலும் எரிவான். அவன் யார்? சூரியன்*

*3. முதுகிலே அரிதாரம் பூசுவான்; முகத்தை பளிச்சென்று காட்டுவான். அவன் யார்? கண்ணாடி*

*3. சுண்டி விட்டால் இரத்தம் வராது; ஆனால் வெற்றி தோல்வி வரும். அவன் யார்? நாணயம்*

*4. அமாவாசைக்கு வயதானால் பௌர்ண மியாக்குவான். அவன் யார்? தலைமுடி*

*ஆசிகா ரஹ்மத், தரம்: 07*
*அல்/ ஹஸ்ஸானியா ம.க. மக்கொன*

## ஐரோப்பா காலனித்துவம் செய்த சில முஸ்லிம் பிரதேசங்கள்

| | | |
|---|---|---|
| 1820 | ஓமான், கட்டார் | (ஆங்கிலேயர்) |
| 1820 | அல்ஜீரியா | (பிரான்ஸ்) |
| 1834 | கவ்காஸ் | (ரஷ்யா) |
| 1839 | ஏடன் துறைமுகம் | (பிரிட்டன்) |
| 1853 | தாஷ்கந்த் | (ரஷ்யா) |
| 1857 | இந்திய மொகலாயர் ஆட்சி | (பிரிட்டன்) |
| 1873 | உஸ்பெகிஸ்தான் | (ரஷ்யா) |
| 1879 | ஆப்கான் | (பிரிட்டன்) |
| 1881 | டியூனீசியா | (பிரான்ஸ்) |
| 1882 | சூடான் | (பிரிட்டன்) |
| 1885 | எரிட்ரியா | (இத்தாலி) |
| 1890 | செனகல் | (பிரான்ஸ்) |
| 1891 | மஸ்கட், ஓமான் | (பிரிட்டன்) |
| 1898 | சூடான் பிரிட்டனின் முழு ஆதிக்கம் | |
| 1900 | ஷாட் | (பிரான்ஸ்) |
| 1912 | லிபியா | (இத்தாலி) |
| 1920 | ஈராக் | (பிரிட்டன்) |
| 1926 | சோமாலியா | (இத்தாலி) |

*எப். இல்மா சஹுதுல்லா - தரம் 08*
*எல்லைமுல்ல ஸாஹிரா மு.வி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளும் நாடாளுமன்றமும்

அமெரிக்கா- காங்கிரஸ்
இலங்கை- பாராளுமன்றம்
ஈரான்- மஜ்லிஸ்
இங்கிலாந்து- பிரபுக்கள் சபை
சீனா- தேசிய மக்கள் சபை
நோர்வே- ஸ்டோர்டிங்
ஜப்பான்- டயட்
அவுஸ்திரேலியா- பெடரல் நாடாளுமன்றம்
டென்மார்க்- போல் கெட்டிங்

***ஏ.எம். ஸாதிர், தரம் - 10***
***அல்சிராஜ் ம.வி. அக்கரைப்பற்று***

## அறிவைப் பெற்றுக் கொள்ளல்

"அறிவு தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்." (அல்ஹதீஸ்)

"அறிவைத் தேடுங்கள். அற்குரிய மதிப்பைக் கொடுங்கள். விளையாட்டு வேடிக்கையுடன் அதனைக் கலக்காதீர்கள்."

"அறிவு தேட வீட்டை விட்டுக் கிளம்பி செல்பவருக்கு மலக்குகள் துஆச் செய்கிறார்கள்." (அல்ஹதீஸ்)

"எவர் கல்வியைத் தேடிச் செல்கிறாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்தின் பாதையை இலகுபடுத்துகின்றான்." (அல்ஹதீஸ்)

***ஆர்.எப். ஸப்னா, தரம் - 10***
***பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.***
***ஓட்டமாவடி***

## வாழ்க்கையில் மூன்று



| | |
|---|---|
| மதிப்பளிக்க வேண்டிய மூன்று | முதுமை, மதம், சட்டம் |
| விரும்ப வேண்டிய மூன்று | தூய்மை, நேர்மை, கடின உழைப்பு |
| பாராட்ட வேண்டிய மூன்று | அழகு, அறிவு, குணம் |
| வளர்த்துக் கொள்ள வேண்டிய மூன்று | அஞ்சாமை, உற்சாகம், திருப்தி |
| காப்பாற்ற வேண்டிய மூன்று | செல்வாக்கு, நட்பு, பற்று |
| விலக்க வேண்டிய மூன்று | மது, சூது, புகைப்பிடித்தல் |
| கட்டுப்படுத்த வேண்டிய மூன்று | நாக்கு, உணர்ச்சி, இச்சை |
| கவனிக்க வேண்டிய மூன்று | பேச்சு, நடத்தை, செயல் |
| ஒழிக்க வேண்டிய மூன்று | சோம்பல், பொய், புறம் |

***அஷீம் ஷேக் - தரம் 8***
***ப/ அல்பதுரியா மு.ம.வி***
***தியத்தலாவ***

## இலங்கை பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| சுதந்திரமடைந்த ஆண்டு: | 1948.02.04 |
| புனித வெள்ளரசு மரம் நடப்பட்டுள்ள இடம்: | மிகிந்தலை |
| வெள்ளரசுக்கிளையைக் கொண்டு வந்தவர்: | சங்கமித்தை |
| கலாசார முக்கோணப் பிரதேசம்: | அனுராதபுரம், பொலநறுவை, கண்டி |
| தேசிய விளையாட்டு: | கரப்பந்தாட்டம் |
| முதலாவது பிரதமர்: | டி.எஸ். சேனநாயக்க |
| இலங்கையின் கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கப்படும் இடங்கள்: | லக்சல நிறுவனம், ஜனகலா கேந்திரம் |

***ஏ.ஆர். பாத்திமா ஸப்னா, கமு/ அல்மனார் ம.க. மருதமுனை***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் எத்தனையாம் ஆண்டு அமைக்கப்பட்டது? | 1974 |
| இலங்கையில் கண்ணாடித் தொழிற்சாலை எங்கு அமைந்துள்ளது? | நாத்தாண்டிய |
| இலங்கையில் செய்மதித் தொடர்பு நிலையம் எங்கு அமைந்துள்ளது? | பாதுக்கை |
| சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரின் பெயர் என்ன? | பேடன் பவல் பிரபு |
| யூரோ நாணயம் எத்தனையாம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது? | 1999 |
| சூரியக் கிரகணத்தின் மூலம் கண்டறியப்பட்ட வாயு எது? | ஹீலியம் |
| பசுபிக் சமுத்திரத்தினை விட உயர்வான சமுத்திரம் எது? | அத்திலாந்திக் சமுத்திரம் |
| பிரபஞ்சம் பற்றிய சிந்தனைக்கு முதலில் வித்திட்டவர் யார்? | கிளாடிஸ் தொலமி |
| முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் ஆண் இன மீன் எது? | கடற் குதிரை |

*எஸ்.எம். சமீனுல் ஹக், பு/ ஹிதாயத் நகர் மு.வி.*



# அன்னை தெரேசா பெற்ற விருதுகள்

*1962* சமாதானம் மற்றும் உலகப் புரிந்துணர்வுக்கான 'மக்சசே' விருது
*1963* பத்மஸ்ரீ விருது
*1971* பாப்பரசர் 23ம் அருளப்பரால் சமாதானம் பரிசு மற்றும் 'கப்ரியல்' விருது
*1973* டெம்லொடொன் விருது
*1979* அமைதிக்கான நோபிள் பரிசு
*1980* இந்திய அரசின் 'பாரத ரத்னா' பட்டம்
*1981* பிரான்ஸ் அரசினால் Legiond Honnour என்ற கௌரவப் பட்டம்
*1985* அமெரிக்காவின் அதியுயர் விருதான விடுதலைக்கான அதிபர் பதக்கம்
*1996* கௌரவ அமெரிக்க குடிமக்கள் தகைமை
*1997* அமெரிக்க காங்கிரஸ் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

*எச்.எம். பாத்திமா*
*அல்ஹிலால்புர, தம்பாளை*

# பொது அறிவுத் துணுக்குகள்

| | |
|---|---|
| *1.* பிறப்பு விகிதமே இல்லாத நாடு எது? | வத்திகான் |
| *2.* வருடம் முழுவதும் பூமியில் புதைந்து வரும் நாடு எது? | நெதர்லாந்து |
| *3.* உலகில் தட்டையான சம தளமான நாடு எது? | மாலைதீவு |
| *4.* கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகப்படுத்திய நாடு? | நோர்வே |
| *5.* கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு எது? | டென்மார்க் |
| *6.* படகு வடிவில் அமைந்துள்ள நாடு எது? | இத்தாலி |
| *7.* உலகில் மிகவும் மதிப்புள்ள ஓவியம் எது? | மோனாலிசா |
| *8.* உலகில் மிகப்பெரிய பங்குச் சந்தை எது? | நிவ்யோர்க் |
| *9.* டெக்சி அதிகமுள்ள நாடு எது? | மெக்ஸிக்கோ |
| *10.* உலகின் மின் தடையற்ற நாடு எது? | குவைத் |

*எம். சாமிர் சபானா*
*பாத்திமா ஸஹ்றா ம. அ. க.*
*ஓட்டமாவடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்- 33

அன்றாட வாழ்வில்

# அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

சென்ற இதழ் தொடர்...

## اَلْفِعْلُ الْمَجْهُوْلُ

வினவப்பட்டான் — سَأَلَ ← سُئِلَ

وَإِذَا الْمَوْؤُوْدَةُ سُئِلَتْ

உயிரோடு புதைக்கப்பட்ட பெண் குழந்தை வினவப்படும்போது.

நகர்த்தினான் — سَيَّرَ

وَإِذَا الْجِبَالُ سُيِّرَتْ

மலைகள் பெயர்க்கப்படும்போது

ஒன்றுகூட்டினான் — حَشَرَ

وَإِذَا الْوُحُوْشُ حُشِرَتْ

வனவிலங்குகள் ஒன்றுசேர்க்கப்படும்போது

வெட்டப்பட்டது — قَطَعَ — قُطِعَ

قُطِعَتْ هَذِهِ الشَّجَرَةُ

இந்த மரம் வெட்டப்பட்டது.

1. மேலுள்ள உதாரணங்களை நோக்கும்போது அவற்றில் உள்ள வினைச்சொல்களின் முதல் எழுத்து ـُ அடையாளத்தையும் இரண்டாம் எழுத்து ـِ அடையாளத்தையும் இறுதி எழுத்து ـَ அடையாளம் பெற்றதாகவும் வந்திருப்பதனை அவதானிக்கலாம்.

2. நடு எழுத்து அலிப் ஆக வரக்கூடிய இறந்த கால வினைச் சொற்கள்.

இவ்வகை வினைச் சொற்களின் முதல் எழுத்து ـِ பெற்றதாகவும் நடு எழுத்து ـْ பெற்ற நிலையிலும் இறுதி எழுத்து ـَ பெற்றும் வரும்.

உதாரணங்களை அவதானியுங்கள்.

சொல்லப்பட்டது — قَالَ ← قِيْلَ

قِيْلَتِ الآرَاءُ

கருத்துகள் சொல்லப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| விற்கப்பட்டது | بِيْعَ    بَاعَ |
| இந்த வீடு நேற்று விற்கப்பட்டது. | بِيْعَ هَذَا الْبَيْتُ بِالأَمْسِ |

| | |
|---|---|
| بَاعَ —— يَبِيْعُ | قَالَ —— يَقُوْلُ |
| بِيْعَ —— يُبَاعُ | قِيْلَ —— يُقَالُ |

3. மூன்று எழுத்துக்கள் கொண்ட இறந்த கால வினைச் சொல்லின் இறுதி இரண்டு எழுத்துக்களும் ـّ பெற்று வரும்போது முதல் எழுத்து ـُ பெற்ற நிலையிலும் இறுதி இரண்டு எழுத்துக்களும் ـَ உடைய நிலையிலும் ـّ பெற்று வரும்.

கீழ் உள்ள உதாரணங்களை அவதானியுங்கள்

| | |
|---|---|
| இழுத்தான் شَدَّ | நீட்டினான் مَدَّ |
| எமக்கு உதவிக்கரம் நீட்டப்பட்டது. | مُدَّتْ لَنَا يَدُ الْعَوْنِ وَالْمُسَاعَدَةِ |

4. கயிறு இழுக்கப்பட்டது. شُدَّ الْحَبْلُ

இவ்வகை வினைகள் நிகழ்கால செயற்பாட்டு வினையாக வரும்போது பின்வரும் அமைப்பில் மாற்றமடையும்.

مُدَّ —— يُمَدُّ

உதவிக்கரம் நீட்டப்படும். تُمَدُّ يَدُ الْعَوْنِ وَالْمُسَاعَدَةِ

شُدَّ —— يُشَدُّ

உதவியளிக்கப்பட்டான் —— نُصِرَ    உதவி செய்தான் —— نَصَرَ

"நீங்கள் உங்கள் சொத்துக்களால் மக்களைக் கவர முடியாது. மாறாக உங்களுடைய மலர்ந்த முகம் மற்றும் நற்குணத்தால்தான் கவர முடியும்." (ஹாகிம்)

"என்னுடைய இரட்சகனே! என்னை அழகாகப் படைத்தது போன்று என்னுடைய ஒழுக்கத்தையும் அழகுபடுத்துவாயாக!" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். (அஹ்மத், இப்னு ஹிப்பான்)

"நல்லொழுக்கத்தை விட மறுமையின் தராசில் வேறு எதுவும் கனமானதாக இருக்காது" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## I learn every day







Assalamu alaikum dear friends,

Did you wish your dad "Happy fathers day!" this month? Do you know how much trouble your dad has taken through out his life time , to give you a good life. Remember , If you can please your father, in Shaa Allah, you can please Allah, too.

## LOOK AT THIS



I wonder , how do petals change their colors
Every season without haste,
Some times pink, some times purple
yellowish gold and now it's red!
I wonder where it's hidden ,
the color box of nature
and the mighty brush
that paints the beauty
I just can say
"God is so creative, and of course he is"



Coming to the July theme, flowers!! Have you ever visited a town full of flowers!

This is something I wrote about my university- home of seasonal flowers. Friends , do you love flowers? Do you have experience in writing poems? I think most of us who've tried poetry, would have first written on 'flowers', am I write? (Even if not in English , in your own language)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Wikipedia says...

*A **flower**, sometimes known as a bloom or blossom, is the reproductive structure found in flowering plants.*

Now, here are some flowering plants.

Rose

Mango

Lotus

Wild grasses


Coconut.

**What is your favourite flower?**

I like rose.

Next,

**Picture Story....**




## Your corner ! A kind mail


Assalamu Alaikum Warahmathullahi Wabarakathuhu!

Dear Sister, I'm a student in grade 11. I read AHARAM every month. I really like the English Part of that magazine

Your's

Manarul Hudha

## Friendship



Friendship is a bond between two living beings. Friendship is formed irrespective of Age, status, creed and gender. A child, a teenager, a young man or even an old man can find a friend according to his feelings and wishes.

A true friend shares feelings such as happiness, sadness and affection. Friends should be trustworthy and loyal to each other. Caring and Sharing make a Friendship healthy and it uplifts the lives of friends and it will give Colour to LIFE.

Thank you

**Mohamed Nabeel**

**Zahira collage gintota, Galle.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Literal War

I am somewhat a Soldier
I have a war in a Year

A war not with rifles and guns
but with papers and pens
a war not of shooting and casting
but of reading and writing

I am somewhat a Knight
I have a war in a Month

No sky like land fields
just the size of a beehive for young ants
no opposing tyrants with grand shields
just me with my shirt and old pants

I am somewhat a Warrior
I have a war in a Week

This won't go on for years
even won't last for two hours
this is not with ear deafening screams
just with the sound heard by deafs

I am somewhat a King
I have a war in a Day


But one is certain
the one who is calm and cool
wins and gets the realm and rule

Actually, I am a Student
and I have an Exam, Today!

**Amry Asif**
**D. S. Senanayake College, Colombo**

# MY SELF

**My** name is Nuha Fathima. I am in Grade 8A. I live in Nakalagamuwa. My school is Ku/Hizbullah Central College. I have a brother and a sister. My brother is Munshif and my sister is Nusfa. My favourite colour is green. My favourite subject is Islam and English. My favourite cricketer is Dhoni. My hobby is reading story books. My father is a Business man and my mother is a house wife. My friends are Masna, Rasha ,Sahira and Sajidha. One day I like to be a lawyer.



**B.M.N Fathima**
**Grade 08 A**
**Ku/Hizbullah**
**Central College.**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது


கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## 10ம் தரம்

1. i. அருகிலுள்ள இந்தியப் படத்தில் A, B, C என்ற எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து, அதே ஒழுங்கில் தருக.

(குஜராத், கலிங்கம், காஷ்மீர், முல்தான்)

(3 புள்ளிகள்)




ii. டில்லி சுல்தானிய காலத்தில் ஆட்சி செய்த 4 அரச வம்சங்களைத் தருக. (4 புள்ளிகள்)

iii. அக்பர் பேரரசரின் சாதனைகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ஆசிய நாடுகளில் பௌத்த சமயம் ஏற்படுத்திய செல்வாக்குகள் இரண்டை விளக்குக.

(6 புள்ளிகள்)

### விடைகள்

i. A- கலிங்கம் B- குஜராத் C- காஷ்மீர்

ii. அடிமை அரச வம்சம், கல்ஜி அரச வம்சம், துக்ளக் அரச வம்சம்

### iii. சமய சகிப்புத்தன்மை

பேரரசர் அக்பர் ஒரு முஸ்லிமாக இருந்தும் பிற சமயத்தவரிடம் சகிப்புத்தன்மையைக் கடைபிடித்தார். எல்லா சமய மக்களையும் ஒரே விதமாக நோக்கினார். இவரது ஆட்சியில் அனைத்து மத மக்களும் சகல உரிமைகளையும் பெற்றனர். இராஜபுத்திரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அவர் நிறுத்தினார். ஏனைய சமயத்தவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட ஜெசியா என்ற வரியை நீக்கினார். இதனால் இந்து, பௌத்த, சீக்கிய மதத்தவர்கள் பேரரசர் அக்பரின் ஆட்சியில் திருப்தியடைந்தனர்.

### சிறந்த நிருவாகத்தை நடத்தியமை

இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் ஆட்சியாளர்களுள் சிறந்த நிருவாகத்தை நடத்தியவர் பேரரசர் அக்பர் ஆவார். இவர் வரி அறவிடுவதற்காக சிறந்த வரிக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். இதனால் ஏழைகள் அதுவரை அடைந்த துயரம் நீங்கியது. நிருவாகத்தை இவர் பன்முகப்படுத்தியமையால் நாட்டில் சிறந்த ஆட்சி நடைபெற்றது. திறமையான உத்தியோகத்தர்களை இவர் உற்சாகப்படுத்தினார். இவர் மன்சத்தார் முறையை அறிமுகப்படுத்தினார். இதன்படி அரச மாளிகையில் சமையல் செய்பவர் 10 போர் வீரர்களுக்கு பொறுப்பான அதிகாரியாவர். அரசரின் செயலாளர் 1000 வீரர்களுக்கு பொறுப்பான அதிகாரியாவார்.

### iv. பௌத்த விகாரைகள் கட்டப்பட்டமை

ஆசிய நாடுகளில் பௌத்த சமயம் வளர்ச்சியடைந்தமையினால் கட்டடக் கலை வளர்ச்சியடைந்தது. பௌத்த சமயத்தைப் பின்பற்றியவர்கள், தமது வழிபாட்டுக்காக, விகாரைகளை அமைத்தார்கள். இவ் விகாரைகள் மக்களின் பக்தியையும் ஒற்றுமையையும் தொழிநுட்பத்தையும் பிரதிபலிக்கின்றன. மியன்மாரில் அமைந்துள்ள ஸ்வதேகொன் விகாரை உலகப் புகழ்பெற்றது. அதே போல ஜாவாத் தீவிலுள்ள போரோ புதூர் என்ற விகாரை அங்கு ஒரு புனிதத் தலமாகக் கருதப்படுகின்றது.

### கலாசார தொடர்பு அதிகரித்தமை

ஆசிய நாடுகளிடையே பௌத்தம் பரவியமையால், இந்நாடுகளுக்கு இடையிலான கலாசார தொடர்புகள் அதிகரித்தன. கி.பி. 429லும் 433லும் நந்தி என்ற கப்பல் உரிமையாளர் தேவராசா பிக்குணி தலைமையில் பிக்குணி குழுக்களை சீனாவுக்கு அழைத்துச் சென்று, அங்கு பிக்குணி பௌத்த சாசனத்தை ஆரம்பித்ததும் பாகியன், ஹியுங்சான், இத் சிங் ஆகிய சீனப் பிக்குகள் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கலாசாரத் தொடர்பை ஏற்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ், துருக்கி, ரஷ்யா, பல்கேரியா, ஹங்கேரி

i. மேலுள்ள நாடுகளுள் மத்திய ஐரோப்பிய வல்லரசு அணியைச் சேர்ந்த நாடுகளைத் தருக. (3 புள்ளிகள்)

ii. வர்சேல்ஸ் உடன்படிக்கையில் இடம்பெற்ற 4 அம்சங்களைத் தருக. (4 புள்ளிகள்)

iii. ஜப்பானின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளே அது 2ம் உலக யுத்தத்தில் அணுகுண்டினால் அழிவடைந்தமைக்கான காரணங்களாகும். இதனை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. 2ம் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றை விளக்குக. (6 புள்ளிகள்)

## விடைகள்

i. துருக்கி, பல்கேரியா, ஹங்கேரி

ii. அ) அல்சேஸ், லொரேன் பிரதேசங்களை ஜேர்மனி, பிரான்சிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

ஆ) ஜேர்மனியின் இராணுவ வீரர்களின் தொகையை ஒரு இலட்சமாகக் குறைக்க வேண்டும்.

இ) யுத்தக் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் தயாரிப்பதை ஜேர்மனி நிறுத்த வேண்டும்.

ஈ) ஜேர்மனி 33 லட்சம் டொலர் பணத்தை வெற்றிபெற்ற நாடுகளுக்கு நட்டஈடாகச் செலுத்த வேண்டும்.

### iii. ஜப்பான் பல நாடுகளை ஆக்கிரமித்தமை

ஜேர்மனி போல தானும் ஒரு வல்லரசாக மாற வேண்டும் என்று ஜப்பான் விரும்பியது. தனது படைபலத்திலும் அதீத நம்பிக்கை கொண்டது. இதனால் சர்வதேச சங்கத்தின் வேண்டுகோள்களைப் புறக்கணித்து, 1934இல் வட சீனாவின் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. மேலும் சீனாவின் சில துறைமுகங்களையும் நகரங்களையும் கைப்பறியது. இச்செயல்களை சர்வதேச சங்கம் கண்டிக்கவே ஜப்பான் அச்சங்கத்திலிருந்து வெளியேறியது. 1942இல் சிங்கப்பூரைக் கைப்பற்றியது. 1942.4.5இல் திருகோணமலை மீதும், 7ஆம் திகதி கொழும்பின் மீதும் ஜப்பான் குண்டுகளை வீசியது.

### பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

ஜப்பான் அணுகுண்டினால் அழிவடைந்தமைக்கு அது பேர்ள்துறைமுகத்தைத் தாக்கியமையே பிரதான காரணமாகும். 1941.11.07ஆம் திகதி இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் ஐக்கிய அமெரிக்காவின் 5 போர்க் கப்பல்கள் கடலில் மூழ்கின. 150 விமானங்கள் அழிந்தன. இத்தாக்குதலில் 2300 வீரர்கள் மரணமடைந்தனர். இதற்கு பதிலடியாகவே ஐக்கிய அமெரிக்கா ஜப்பான் மீது அணு குண்டுகளை வீசியது. 1945.08.06இல் ஹிரோசிமா மீதும் 1945.08.09இல் நாகசாசி மீதும் ஐக்கிய அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது.

### iv. பலர் உயிரிழந்தமை

இரண்டாம் உலக யுத்தத்தில் கோடிக்கணக்கானவர்கள் மரணமடைந்தனர். நவீன யுத்தக் கருவிகளும் குண்டு வீச்சு விமானங்களும் பல அழிவுகளை ஏற்படுத்தும் நீர்மூழ்கிக் கப்பல்களும் செயற்பட்டதனால் உயிரிழப்புக்கள் அதிகமாக இருந்தன. போர் வீரர்களும் பொதுமக்களுமாக 5 கோடிப் பேர் மரணமடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அணுகுண்டினால் பாதிக்கப்பட்ட ஹீரோசீமா நகரில் உள்ள கல்லறைகளில் இறந்தவர்களில் 138,890 பேரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் மாத்திரம் 7,000,000 இராணுவத்தினரும் 7,700,000 பொதுமக்களும் இறந்தனர்.

### ஐக்கிய நாட்டவையம் உருவாகியமை

இரண்டாம் மகா யுத்தத்தினால் பல கோடி மக்கள் இறந்தனர். அதனால் அவ்வாறான ஒரு யுத்தம் இனிமேலும் ஏற்படக்கூடாது என்பதற்காக, ஐக்கிய நாடுகள் தாபனம் ஏற்படுத்தப்பட்டது. இத்தாபனம் இன்றுவரை மூன்றாம் உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுத்து வருகின்றது. 1945இல் சன்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபைக்கான கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டது. இதனை 50 நாடுகள் ஏற்றுக் கொண்டன. 1945.10.24இல் ஐக்கிய நாடுகள் சபை உதயமானது. இது உலகில் ஏற்பட்ட பல யுத்தங்களை சமாதான வழியில் தீர்த்து வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மார்சல் திட்டம் உருவாகியமை

இரண்டாம் உலக யுத்தத்தில் அழிந்த நாடுகளுக்கு உதவுவதற்காக ஐக்கிய அமெரிக்காவினால் மார்சல் திட்டம் உருவானது. ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் ஜோன் மார்சல் தலைமையிலான குழுவே இத்திட்டத்தை தயாரித்தது. இதன் காரணமாக ஜேர்மனி, ஜப்பான் முதலிய போரில் பாதிக்கப்பட்ட நாடுகள் மீண்டும் பொருளாதாரத்துறையில் எழுச்சியடைந்தன. இதுவே உலகில் வழங்கப்பட்ட முதலாவது அந்நிய உதவித் திட்டமாகும். இதனைத் தொடர்ந்து இன்று உலகில் பல அந்நிய உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ■

---

### அல்குர்ஆன் கூறும் கதைகள் (3ஆம் பக்க தொடர்)

அதற்கு அவர் கூறினார்: "இன்று அல்லாஹ்வின் தீர்ப்பிலிருந்து காப்பாற்றக் கூடியது எதுவும் இல்லை. ஆனால், அல்லாஹ் யாருக்குக் கருணை புரிந்தானோ அவர்கள் மட்டும் காப்பாற்றப்படுவார்கள்." இதற்குள்ளாக இருவருக்குமிடையே ஓர் அலை குறுக்கிட்டு விட்டது. மேலும் மூழ்கடிக்கப்பட்டவர்களில் அவன் சேர்ந்து விட்டான்!

பின்னர், "பூமியே! உனது நீர் முழுவதையும் விழுங்கிவிடு; வானமே, நிறுத்திக்கொள்!" என்று கட்டளையிடப்பட்டது. அவ்வாறே நீர் வற்றி விட்டது. கட்டளை நிறைவேற்றப்பட்டுவிட்டது. மேலும் கப்பல், ஜூதி எனும் மலையில் நிலை கொண்டது; பிறகு கூறப்பட்டது: "ஒழிந்து விட்டார்கள், அக்கிரமப் புரிந்த மக்கள்!"

நூஹ் தன் இறைவனிடம் பிரார்த்தித்துக் கூறினார்: "என் இறைவனே! என்னுடைய மகன் எனது குடும்பத்தைச் சேர்ந்தவன்; மேலும், திண்ணமாக உனது வாக்குறுதி உண்மையானதாகும். மேலும், தீர்ப்பளிப்பவர்களில் நீ மிகச் சிறந்தவனும் உயர்ந்தவனுமாவாய்!"

அதற்கு அல்லாஹ் பதிலளித்தான்: "நூஹே! திண்ணமாக அவன் உமது குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன். அவன் ஒரு வீணான 'செயல்' ஆவான். எதனுடைய உண்மை நிலையை நீர் அறிய மாட்டீரோ அதைப் பற்றி என்னிடம் கேட்காதீர்! அறிவிலிகளில் நீரும் ஒருவராகிவிட வேண்டாம் என்று நான் உம்மை அறிவுறுத்துகிறேன்."

உடனே, நூஹ் பணிந்து கூறினார்: "என் இறைவனே! எதைப் பற்றி எனக்கு அறிவு இல்லையோ அதைப்பற்றி உன்னிடம் கேட்பதைவிட்டு உன்னிடத்தில் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். நீ என்னை மன்னிக்காவிட்டால், மேலும் அருள்புரியாவிட்டால் நான் அழிந்து போய்விடுவேன்!"


கட்டளை அருளப்பட்டது: "நூஹே! இறங்குவீராக உம்மீதும் உம்முடன் இருக்கும் சமூகத்தின் மீதும் நம்முடைய சாந்தியும் அருள் வளங்களும் உண்டாகட்டும்! மேலும், உங்களில் வேறு சில சமூகங்களும் (தோன்ற) உள்ளன. அவர்களுக்கு சொற்ப காலத்திற்கான வாழ்க்கை வசதிகளை வழங்குவோம். பிறகு, நம்மிடமிருந்து துன்புறுத்தும் வேதனை வந்து அவர்களைப் பிடித்துக் கொள்ளும்!"

(நபியே!) இவை மறைவான செய்திகளாகும். இவற்றை நாம் உமக்கு அறிவிக்கின்றோம். அதற்கு முன்னர் நீரும் இவற்றை அறிந்திருக்கவில்லை. உம்முடைய சமுதாயத்தினரும் இவற்றை அறிந்திருக்கவில்லை. எனவே, பொறுமையை மேற்கொள்வீராக! நிச்சயமாக இறுதியில் நல்ல முடிவு இறையச்சம் உள்ளவர்களுக்கே உரியதாகும். ■

---

### விஞ்ஞானம் (33ஆம் பக்க தொடர்)

08. தென்னம் பதனீரிலுள்ள வெல்லம் வினாகிரியாக மாற்றப்படும் வரையில் நிகழும் தாக்கங்களுக்கான சமன்பாடுகளை பின்வரும் வரிப்படம் குறிக்கின்றது.




I. a,b என்பவற்றினால் குறிக்கப்படும் நுண்ணங்கிகளை எழுதுக.

II. நொதிப்பு செயற்பாட்டினால் தோன்றும் விளைபொருளின் இரசாயனச் சூத்திரத்தை எழுதுக.

III. விளைபொருள் X இன் இரு பயன்களைக் குறிப்பிடுக.

இயற்கை இறப்பர் Hevea brasiliexis எனும் தாவரவியற் பெயரைக் கொண்ட இறப்பர் மரத் தண்டிலிருந்து பெறப்படுகின்றது.

இறப்பர் பாலினுள்ள கூறுகள்: நீர் (52- 60%), இறப்பர் (30- 41%), புரதம், வெல்லம், ரெசின் சிறிதளவு)

09. I. இறப்பர் பால் திரட்சியடைவதைத் தடுக்கும் திரட்சி நிரோதிகள் மூன்றை எழுதுக.

II. இறப்பர் வல்கனைசுப்படுத்தல் என்றால் என்ன?

III. இறப்பர் வல்கனைசுப்படுத்துவதனால் கிடைக்கப் பெறும் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயார்படுத்தலும் தகுதிப்படுத்தலும்

## ஷஃபான் முதல் ஈத் வரை

ஜே.எம். அஸீம் (நளீமி)

**வெற்றி** என்பதை எப்போதும் கனவு கண்டு கொண்டிருக்கும் நாம் அந்த வெற்றியை அடைவதற்கான வழிமுறைகளில் ஒருபோதும் தவறிவிடக் கூடாது. திட்டமிடல், தயார்படுத்தல் என்ற ஒழுங்கில் சென்று கடைசியில் எம்மைத் தகுதிப்படுத்தி வெற்றி பெற்றவர்களாக நாம் மாற வேண்டும்.

எந்தவொரு சவாலை எதிர்கொள்ளவும் எந்தவொரு போட்டிக்கும் நாம் முழுத் தயார்படுத்தலுடனேயே செல்ல வேண்டும். குறிப்பாக, சுவன பாக்கியத்தை அடைவதை ஆசிக்கும் நாம், அதனை அடைய எத்தகைய தயார்படுத்தலுடனும் தகுதிப்படுத்தலுடனும் இருக்க வேண்டும் என்பதை விளக்க வேண்டிய தேவை இல்லை.

ரமழான் எனும் வசந்தம் நிறைந்த கண்ணியமான மாதத்தை நாம் மிகச் சிறப்பாக பயன்படுத்த எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். தயார்படுத்துவது மாத்திரமல்ல, சுவனத்திற்கான தகுதிகளையும் பெற முயற்சிக்க வேண்டும். அந்தத் தகுதிதான் மறுமையில் எமக்கு சுவனத்தைப் பெற்றுத் தரும், இன்ஷா அல்லாஹ்.

"ரஜப், ரமழான் ஆகிய மாதங்களுக்கு இடையே வரும் ஷஃபான் மாதத்தில் மக்கள் பொடுபோக்காக இருக்கின்றனர். அம் மாதத்தில்தான் மனிதர்களின் செயல்கள் அல்லாஹ்விடத்தில் எடுத்துக் காண்பிக்கப்பட்டு உயர்த்தப்படுகின்றன. என்னுடைய செயல்கள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்படுவதை விரும்புகிறேன்" (நஸாஈ) என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதிலிருந்து நாம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

ஒன்று, ரமழானுக்கு முன்னர் வரும் ஷஃபானில் நாம் பொடுபோக்காக இருப்பது.

மற்றையது குறிப்பிட்ட அந்தத் தருணத்தின் முக்கியத்துவம் கருதி அத்தருணத்தில் செய்ய வேண்டியதைச் செய்வது. அதாவது, எமது செயல்கள் அல்லாஹ்விடம் உயர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் நாம் நோன்பாளியாக இருந்து அதனைக் கண்ணியப்படுத்தி நற்பேறு அடைவது.

சந்தர்ப்பங்களை கனகச்சிதமாகப் பயன்படுத்துவது, இலக்குகளை வரையறுத்து அடைந்து கொள்வது, அதனை அடையத் திட்டமிடுவது, இலக்கு நோக்கிப் பயணிப்பது, அதற்காகத் தயார்படுத்துவது, அதற்குத் தகுதிப்படுத்திக் கொள்வது, கட்டம் கட்டமாக முன்னேறுவது என நாம் பல விடயங்களை இதிலிருந்து கற்றுக் கொள்ள முடியும்.

இந்த வகையில் அருள்மிகு மாதமொன்றில் நாம் இப்போது இருக்கின்றோம். ஆனால், அலட்சியமாக இருக்கின்றோமோ என எண்ணத் தோன்றுகிறது. கண்ணியமிக்க ரமழான் மாதம் எம்மை நெருங்குகிறது. ரமழானில் நோன்பிருந்து அதிகமதிகம் வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் நாம், அதற்கு முந்திய மாதம் பற்றி எத்தகைய விழிப்புணர்வுடன் செயற்படுகிறோம் என சிந்திக்கத் தோன்றுகிறது. காரணம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மேற்கூறிய ஹதீஸ் ஆகும்.

இந்த மாதத்தின் முக்கியத்துவமும் ஆனால் அது பற்றி நாம் அலட்சியமாயிருப்பதும் இந்த ஹதீஸிலே இணைத்து குறிப்பிடப்படுகின்றதல்லவா! நாம் சற்று சிந்திக்க வேண்டும். இந்த மாதத்தில் நான் அலட்சியமாக இருக்கின்றேனா? நபியவர்கள் ஆசித்தது போன்று நானும் எனது செயல்கள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்பட வேண்டுமென்று ஆசிக்கின்றேனா? இந்த இரண்டு வினாக்களையும் எம்மிடம் வினவி விடை காண வேண்டும்.

### பொடுபோக்கு

பொடுபோக்குத்தனம் எம்மை அழிவில் ஆழ்த்திவிடக்கூடியது. இதனைத்தான் நபியவர்கள் எச்சரித்தார்கள். அலட்சியமாயிருப்பது இலட்சியங்களைத் தொலைத்துவிடும். கவனயீனம் மிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பலவீனங்களில் ஒன்று. சீரியஸ் இன்மை எம் வாழ்வில் பல இழப்புகளுக்குக் காரணமாகி விடும். எனவே, ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இத்தகைய அசமந்தத் தனங்களை அகற்ற நாம் பாடுபட வேண்டும். இத்தகைய பொடுபோக்கு ஷஃபான் விடயத்தில் எம்மைப் பீடிக்காது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## ஆசிப்பது

மற்றையது உரிய, உகந்த முக்கியத்துவத்தை யறிந்து அதற்கேற்ப தயார்படுத்திக் கொள்வதும் தகுதிப்படுத்திக் கொள்வதும். எமது செயல்கள் ஏக இறைவனிடத்தில் எடுத்துக் காட்டப்பட்டு உயர்த்தப்படும் சந்தர்ப்பம் எத்தகைய முக்கியத்து வமானது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் நோன்பாளி என்ற உயர்ந்த நிலையில் இருப்பது சிறப்பல்லவா!

சுருக்கமாகச் சொல்வதாயின், ஷஃபான் என்பது தயார்படுத்தலுக்கும் ரமழான் என்பது தகுதிப்படுத்தலுக்குமான மாதங்கள் எனலாம். ஷஃபானில் நாம் எம்மை முழுமையாக தயார் படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்தத் தயார்படுத்தலும் தகுதிப்படுத்தலும்தான் எம்மைத் தொடர்ந்தும் இறைபாதையில் உறுதியுடன் பயணிக்கச் செய்ய வேண்டும்.

## தயார்படுத்தல்

தயார்படுத்தல் என்பது முழுமையானதாக அமைய வேண்டும். எம்மில் பலர் ரமழான் முதற் பிறை கண்ட பின்னர்தான் முதலாவது நோன் பினை சிரமப்பட்டு நோற்பர். அப்படியென்றால் நாம் எம்மைத் தயார்படுத்தவில்லை என்றுதான் அர்த்தம். ரமழானில்தான் இந்த ரமழானை சிறப்பாக பயன்படுத்த வேண்டும்; அதற்கு என்ன என்ன செய்யலாம் என சிந்திப்பர். இது தயாரின் மையையே குறிக்கிறது. மாறாக, நாம் உடல் ரீதியாக, உள ரீதியாக எம்மை ரமழானுக்குத் தயார் படுத்துவதோடு பிறரையும் தயார் நிலையில் இருக்கும்படி கூற வேண்டும்.

## தகுதிப்படுத்தல்

ரமழான் மாதம் அல்லாஹ்வின் அருள்களை நிறைவாகப் பெற்று நரகிலிருந்து விடுதலை யடைந்து சுவனம் நோக்கிய பயணமாகவே உள் ளது. எனவே, நரகிலிருந்து விடுதலை பெற்று சுவ னத்திற்கு எம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் அந்தப் பயணத்தில் நாம் முழு மூச்சுடன் பய ணிக்க வேண்டும். பெருநாள் தினத்தில் நாம் எம் மைத் தகுதிப்படுத்திக் கொண்ட அளவுக்கு நிறை வான கூலியைப் பெற்றவர்களாக நாம் மாற வேண்டும்.

ரமழானை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்பதில் விழிப்பாயிருக்கும் நாம் அதற்கு முந்திய ஷஃபானில் அலட்சியமாயிருக்கின்றோம். வெறுமனே எந்தவித தயார்படுத்தலுமில்லாமல் போட்டிக்கு வந்து வெற்றி பெற எந்த வீரனாலும் முடியாது. தன்னை முழுமையாகத் தயார்படுத்திக் கொண்ட, தகுதிப்படுத்திக் கொண்டவர்களால் மாத்திரமே இறுதி வெற்றியை அடைய முடியும். சிறிது கால ஓய்வுக்குப் பின் விளையாடும் விளையாட்டு வீரர்களிடம்கூட இத்தகைய விட யங்களை நாம் கண்ணூடாகக் காண்கின்றோம்.


கற்று அமல் செய்வது அறியாமல் அமல் செய் வதை விட சிறந்தது. எனவே, ஷஃபான் காலங்களில் ரமழான் தொடர்பாக கற்று திட்டமிட்டு தயார்படுத்தி நேரம் ஒதுக்கி நேர முகாமை செய்து அந்த ரமழானில் அமல் செய்கின்றபோது உரிய முறையில் ரமழானை சிறப்பாகப் பயன்படுத்த முடியும். இல்லாவிட்டால் முரசறைந்த பிறகு வாள் தேடி உலைக்களம் செல்வது போல ரமழான் வந்த பின்னர் என்ன செய்வதென்று அறியாமல் தெரியாமல் தட்டுத் தடுமாறும் நிலை ஏற்படும்.

ஷஃபானில் எம்மைத் தயார்படுத்தி ரமழானை எதிர்பார்த்தவர்களாக நாம் இருக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்பு எம்மிடத்தில் ரமழான் தொடர்பான ஆவல், ஆசை என்பவற்றை அதிக ரித்துவிடும். அந்த ஆவல், ஆசை எம்மை நன்மை களை அதிகம் செய்வதற்குத் தூண்டிடும். அந்த எதிர்பார்ப்பு தருகின்ற தூண்டுதல் எம்மை சிறப்பாக முறையில் ரமழானை பயன்படுத்தச் செய்யும். எனவே, இத்தகைய ஓர் ஆரோக்கி யமான சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். ரமழானுக்கு முன்னராகவே ரமழானுக்கான சூழலை ஏற்படுத்துகின்றபோது ரமழானை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான சூழலாக அது அமைந்து விடும்.

எனவே, சிறந்த திட்டமிடலுடன் இந்த ரமழா னைப் பயன்படுத்த நாம் இந்த ஷஃபானிலிருந்தே தயாராவோம். தயாராவது மாத்திரமல்லாமல் சுவனத் தகுதியைப் பெறுவதற்கான முழு முயற்சி யையும் ரமழானில் மேற்கொள்வோம். எனவே, அண்ணலார் காட்டித்தந்த இந்த தூர நோக்கு மிக்க வழிமுறைகளை எமது வாழ்விலும் கடை பிடித்து சுவனத்து சொந்தங்களாக பயணிப் போம், இன்ஷா அல்லாஹ் ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# World Today




**திரு. பீ. உமாசங்கர்,**
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

## லண்டன் பிக்பென் கடிகாரம்



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் மிகவும் பெயர் பெற்றதும் பிரசித்தி பெற்றதுமான கடிகாரமாக இது விளங்குகிறது. மகாராணி இரண்டாம் எலிஸபெத் முடிசூடிய ஆறுபதாவது ஆண்டு வைர விழா 2012ஆம் ஆண்டில் நடைபெறுவதையிட்டு அவரை கௌரவிக்கும் வகையில் இக்கடிகாரத்தின் பெயரானது மாற்றம் செய்யப்பட உள்ளது. இதன் பிரகாரம் இம் மணிக் கூண்டின் பெயரானது 'தி எலிஸபெத் டவர்' என விரைவில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

## கோத்தபாயவின் யுத்தம்




2012 மே மாதம் வெளியிப்பட்ட இந்நூலானது கோத்தபாயவின் கோணத்தில் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்து விளக்குகின்றது. இந் நூலானது 'தி ஐலண்ட்' (The Island) பத்திரிகையின் செய்தியாளர் சீ.ஏ. சந்திர பிரேம் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

## ஆசிரிய பயிற்றுவிப்பாளர்களுக்கான தெற்காசிய பயிற்சி நிலையம்

ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாவது தெற்காசிய பயிற்சி நிலையம் இலங்கையில் மீபேயில் நிறுவப்பட உள்ளது. இது சார்க் பிராந்திய நாடுகளின் மத்திய பயிற்சி நிலையமாக விளங்கும். யுனெஸ்கோ அமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் இப் பயிற்சி நிலையத்தை அமைக்க அரசாங்கம் 587 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## IPL 20க்கு 20 கிரிக்கட் போட்டி

தற்போது கிரிக்கட் உலகில் பிரபல்யம் பெற்ற போட்டியாக IPL 20க்கு 20 கிரிக்கட் போட்டி விளங்குகின்றது. முதலாவது IPL 20க்கு 20 கிரிக்கட் போட்டி 2008ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இப் போட்டியில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. 2012ஆம் ஆண்டில் ஐந்தாவது போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் இடையே நடைபெற்றது. இப் போட்டியில் ஐந்து விக்கட்டுக்களால் வெற்றி கொண்ட கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணி முதல் முறையாக கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது.




## டெங்கு காய்ச்சல்



தற்போது இலங்கையில் பாரிய அச்சத்தையும் மரணங்களையும் ஏற்படுத்துவதுமான காய்ச்சலாக டெங்கு காய்ச்சல் விளங்குகிறது. இது வைரஸ் மூலம் உண்டாகும் ஒரு நோயாகும். இந்நோய் ஈடிஸ், ஈஜிப்ரி மற்றும் ஈடிஸ் அல்போபிரஸ் எனப்படும் நுளம்புகள் மூலம் உண்டாகிறது. டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்க நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் டெங்கு காய்ச்சல் பரப்பும் நுளம்புகளின் உற்பத்தியைத் தடுக்க வேண்டும். தற்போதைய சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்களின்படி 12,336 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 75 பேர் இறந்துள்ளனர். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

## தமிழ் இலக்கணம்– வேற்றுமை

பெயர்ச் சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு (இலக்கணத் தொழிற்பாட்டின் வேறுபாடு) வேற்றுமை எனப்படுகிறது.

(எ-டு)

- நிப்ரினா வந்தாள்.
- நுஸ்கா நளீராவைப் பார்த்தாள்.
- சமீனாவால் குர்ஆன் ஓதப்பட்டது.
- அஸ்கானாவுக்கு பரிசு வழங்கப்பட்டது.
- றிப்னாவை விட சாலிஹா வேறுபட்டவள்.
- பஸ்லத்துடைய படிக்கும் அறை விசாலமானது.
- மாணவர்களிடம் சூழ்ச்சிகள் எதுவுமில்லை.
- குழந்தைகளே கேளுங்கள்.

வினா- வேற்றுமை எத்தனை வகைப்படும்?

விடை-எட்டு வகைப்படும்.

வினா- வேற்றுமையை எவ்வாறு இனங்காணலாம்?

விடை-வேற்றுமை, உருபு, சொல்லுருபு, பொருள் என்பவற்றில் எவற்றையாவது அடையாளம் கண்டு அது எவ்வேற்றுமைக்குரியது என இனங்காணலாம்.

வினா- முதலாம் வேற்றுமைக்கு உருபு உண்டா?

விடை- இல்லை

வினா- எழுவாய் வேற்றுமை எனப்படுவது எது?

விடை- முதலாம் வேற்றுமை.

வினா- செயப்படு பொருள் வேற்றுமை எனப்படுவது எது?

விடை- இரண்டாம் வேற்றுமை

வினா- 'விளி வேற்றுமை' எனப்படும் வேற்றுமை எது?

விடை- எட்டாம் வேற்றுமை

வினா- உருபில்லாத வேற்றுமைகள் எவை?

விடை- 1. முதலாம் வேற்றுமை
2. எட்டாம் வேற்றுமை

வினா- முதலாம் வேற்றுமை தொடக்கம் எட்டாம் வேற்றுமை வரை உருபு, சொல்லுருபு, பொருள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

விடை →

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| 1 | உருபு இல்லை | என்பவன் ஆனவன் | எழுவாய் |
| 2 | ஐ | – | செயப்படு பொருள்<br>ஆக்கல்<br>அழித்தல்<br>அடைதல்<br>ஒத்தல்<br>உடைமை |
| 3 | ஆல்<br>ஆன்<br>ஒடு<br>ஓடு | கொண்டு<br>உடன் | கருவி<br>கருத்தா<br>உடனிகழ்ச்சி |
| 4 | கு | ஆக,<br>பொருட்டு,<br>நிமிர்த்ம் | நட்பு<br>பகை<br>கொடை<br>தகுதி<br>முறை<br>முதற்காரணம்<br>நிமிர்த்த காரணம் |

வினா - பின்வரும் வாக்கியங்கள் எவ்வேற்றுமைக்குரியவை என்பதை இனங்காண்க.

- றிஸ்வியா வந்தாள்.
- மாடு வேலியை உடைத்தது.
- சில்மியா செல்வத்தை உடையவள்.
- நூலகத்தைக் கட்டினார்கள்.
- என் நண்பன் நரியைப் போன்றவன்.
- கத்தியால் வெட்டினான்.
- நல்லோரால் கூறப்பட்டவை.
- கற்றோரைக் கொண்டு தொகுக்கப்பட்டது.
- பணப் பையுடன் திருடன் மறைந்தான்.
- இராவணனுக்கு பகைவன் இராமன்.
- கூனிக்குத் தோழி கைகேயி.
- கற்றோருக்கு வேண்டியது பணிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரதனுக்கு தாய் கைகேயி.
- நகைக்கு தங்க பிஸ்கட் வாங்கினார்.
- கூலிக்காக வேலை செய்தான்.
- கூலிக்கு கிணறு வெட்டினான்.
- கூலியின் பொருட்டு கிணறு கட்டப்பட்டது.

**விடை -**

- நிஸ்வியா வந்தாள். உருபு - இல்லை பொருள் - எழுவாய் - 1ம் வேற்றுமை
- மாடு வேலியை உடைத்தது. உருபு - 'ஐ' பொருள் - அழித்தல் - 2ம் வேற்றுமை
- சில்மியா செல்வத்தை உடையவள். உருபு - 'ஐ' பொருள் - உடைமை - 2ம் வேற்றுமை
- நூலகத்தைக் கட்டினார்கள். உருபு - 'ஐ' பொருள் -ஆக்கல் - 2ம் வேற்றுமை
- என் நண்பன் நரியைப் போன்றவன். உருபு - 'ஐ' பொருள் - ஒத்தல் - 2ம் வேற்றுமை
- கத்தியால் வெட்டினான். உருபு - 'ஆல்' பொருள் - கருவி - 3ம் வேற்றுமை
- நல்லோரால் கூறப்பட்டவை. உருபு ஆல் - பொருள் - கருத்தா -3ம் வேற்றுமை
- கற்றோரைக் கொண்டு தொகுக்கப்பட்டது. உருபு - ஆல் (கற்றோரால்)
- சொல்லுருபு- கொண்டு பொருள் -கருத்தா - 3ம் வேற்றுமை
- பணப்பையுடன் திருடன் மறைந்தான். உருபு - ஒடு (பணப்பையோடு) சொல்லுருபு - உடன்
- பொருள் - உடனிகழ்ச்சி - 3ம் வேற்றுமை

⊙ இராவணனுக்கு பகைவன் இராமன்.
உருபு - கு
பொருள் - பகை - 4ம் வேற்றுமை

⊙ கூனிக்குத் தோழி கைகேயி.
உருபு - கு
பொருள் - நட்பு 4ம் வேற்றுமை

⊙ கற்றோருக்கு வேண்டியது பணிவு.
உருபு - கு
பொருள் -தகுதி 4ம் வேற்றுமை

⊙ பரதனுக்கு தாய் கைகேயி.
உருபு - கு
பொருள் முறை - 4ம் வேற்றுமை

⊙ நகைக்கு தங்க பிஸ்கட் வாங்கினார்.
உருபு - கு
பொருள் - முதற் காரணம் - 4ம் வேற்றுமை

⊙ கூலிக்காக வேலை செய்தான்.
உருபு - 'கு' சொல்லுருபு - 'ஆக'
பொருள் - முதற் காரணம்/நிமித்தக் காரணம்

⊙ கூலிக்கு கிணறு வெட்டினான்.
உருபு - கு
பொருள் - நிமித்தக் காரணம் - 4ம் வேற்றுமை

⊙ கூலியின் பொருட்டு கிணறு வெட்டப்பட்டது.
உருபு - கு
சொல்லுருபு - பொருட்டு 4ம் வேற்றுமை
பொருள் - நிமித்த காரணம்

**வினா** - வேற்றுமை 5 தொடக்கம் 8 வரை உருபு, சொல்லுருபு, பொருள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் |
|---|---|---|---|
| 5 | இல்<br>இன் | நின்று<br>நின்றும்<br>இருந்து | நீங்கள், எல்லை, ஒப்பு |
| 6 | அது | உடைய | உடைமை<br>1. தற்கிழமை (உறுப்பு, பண்பு, தொழில், ஒன்றின் கூட்டம், பலவின் கூட்டம்)<br>2. பிறிதின் கிழமை (பொருள், இடம், காலம்) |
| 7 | கண்<br>இல்<br>இடம | – | இடம் |
| 8 | உருபு<br>இல்லை | – | விளித்தல் பொருள். |

**வினா-** பின்வரும் வாக்கியங்கள் எவ்வேற்றுமைக்குரியதென இனங்காண்க.

- ஊரிலிருந்து நீங்கினான்
- இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணம்
- நஞ்சில் கொடிது பொய்
- காலினது நகம்
- பாலினது வெண்மை
- என்னுடைய கண்
- நெல்லினது குவியல்
- இலக்குவணனது வில்
- பாரி மன்னனுடைய தேர்
- மயிலின் ஆடல் அழகானது.
- மகனுடைய படிக்கும் அறை
- விண்ணில் நட்சத்திரம் ஜொலிக்கிறது.
- முயற்சியின் கண் வெற்றி
- மகளே வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

ஊரிலிருந்து நீங்கினான்.

உருபு - இல்
சொல்லுருபு - இருந்து ◀ 5ம் வேற்றுமை
பொருள் - நீங்கல்

இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணம்

உருபு - இன்
பொருள் - எல்லை ◀ 5ம் வேற்றுமை

நஞ்சில் கொடிது பொய்

உருப்பு - இல்
பொருள் - ஒப்பு ◀ 5ம் வேற்றுமை

காலினது நகம்

உருபு - அது ◀ 6ம் வே..
பொருள் - தற்கிழமை (உறுப்பு)

பாலினது வெண்மை

உருபு - அது ◀ 6ம் வே..
பொருள் - தற்கிழமை (பண்பு)

என்னுடைய கண்

உருபு - அது, அ (எனது)
சொல்லுருபு - உடைய ◀ 6ம் வேற்றுமை
பொருள் - தற்கிழமை

நெல்லினது குவியல்

உருபு - அது
பொருள் தற்கிழமை (ஒன்றின் கூட்டம்)
6ம் வேற்றுமை

இலக்குவணனது வில்

உருபு - அது
பொருள் - பிறிதின் கிழமை (பொருள்)

பாரி மன்னனுடைய தேர்

உருபு - அது (பாரி மன்னனது)
சொல்லுருபு - உடைய
பொருள் - பிறிதின் கிழமை (பொருள்)
6ம் வேற்றுமை

மகனுடைய படிக்கும் அறை

உருபு - அது (மகனது)
சொல்லுருபு - உடைய
பொருள் - பிறிதின் கிழமை (இடம்)
6ம் வேற்றுமை

விண்ணில் நட்சத்திரம் ஜொலிக்கிறது.

உருபு - இல்
பொருள் - இடம்
7ம் வேற்றுமை

மயிலினது ஆடல் அழகானது.

உருபு - அது
பொருள் - தற்கிழமை (தொழில்)

முயற்சியின் கண் வெற்றி

உருபு - கண்
பொருள் - இடம்
7ம் வேற்றுமை

மகளே வா

விளித்தல் பொருள்
உருபு இல்லை
8ம் வேற்றுமை

**வினா**- உருபு மயக்கம் என்பது என்ன?

**விடை**- ஒரு வேற்று 'உருபு' நிற்க வேண்டிய இடத்துக்கு பதிலாக பிறிதொரு வேற்றுமை உருபு நிற்பது உருபு மயக்கமாகும்.

(எ-டு) தெருவால் போனான்.

வந்துள்ளது — ஆல் - உருபு

இல் - உருபு
தெருவில் போனான் — வரவேண்டியது

**வினா**- பொருள் மயக்கம் எனப்படுவது என்ன?

**விடை**- ஒரு வேற்றுமையின் 'பொருளானது' பிறிதொரு வேற்றுமை 'உருபு'டனும் தகுதியாக வருவதாகும்.

(எ-டு) அரிசியைச் சோறு ஆக்கினான்.

கருவி - பொருள்
ஐ - உருபு
— வந்துள்ளது

ஆல் - உருபு
அரிசியால் சோறு ஆக்கினான்
— வரவேண்டியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தச் சமத்துவம் கண்டு சரித்திரம் திகைத்தது

சிராஜுல் ஹஸன்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குப் பிறகு முதல் கலீஃபாவாக ஆட்சிப் பொறுப்பேற்ற அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மக்களை நோக்கி கூறினார்கள்:

"மக்களே, உங்களுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்கள் எல்லோரையும் விட நான் உயர்ந்தவன் என்பதால் அல்ல.

நான் நல்லது செய்யும்போது எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்; தவறு நிகழ்ந்து விட்டால் திருத்துங்கள்.

உங்களில் பலவீனமானவர் என்னிடம் பலசாலி ஆவார். அதாவது அவருடைய மறுக்கப்பட்ட உரிமைகளை நான் வலிமையைப் பயன்படுத்திப் பெற்றுத் தருவேன்.

உங்களில் பலசாலி என்னிடத்தில் பலவீனமானவரே. அவரிடமுள்ள மற்றவர்களின் உரிமைகளைப் பறித்தெடுத்து உரியவருக்கு அளிப்பேன்.

சத்திய வழியிலான போராட்டத்தைக் கைவிடாதீர்கள். அதர்மத்திற்கு அடிபணிபவர்களை அல்லாஹ் நிலைகுலையச் செய்து விடுவான்.

இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் நான் கீழ்படியும் வரை எனக்கு நீங்கள் கீழ்படியுங்கள். இறைவனுக்கும் இறைதூதருக்கும் நான் கீழ்படியவில்லை என்றால் அப்பொழுது எனக்கு நீங்கள் கீழ்படியாதீர்கள்."

ரோமபுரி இராணுவத்தின் பிரதிநிதியான ஜோர்ஜ், முஸ்லிம் இராணுவத் தளபதியுடன் பேச வந்தார்.

அப்போது தளபதி அபூ உபைதா தரையில் அமர்ந்திருந்தார். அவரும் சாதாரண படை வீரர் போலத்தான் இருந்தார்.

"உங்கள் தளபதி எங்கே?" என்று ஜோர்ஜ் விசாரித்தார்.

வீரர்கள் அபூ உபைதாவைக் காட்டினார்கள். ஜோர்ஜுக்கு நம்பிக்கை வரவில்லை.

படைத் தளபதிக்குரிய பதவிச் சின்னங்களோ, சிறப்பாக அமைக்கப்பட்ட தனி இருப்பிடமோ இல்லையாதலால் அவர் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார்.

"தரையில் அமர்ந்திருக்கும் அவர்தாம் எங்கள் தளபதி" என்று பதில் வந்தது.

ஜோர்ஜ் வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார்.

"இவரா உங்கள் தளபதி! எங்களுடைய அடிமைகளைத் தவிர வேறு யாரும் இவ்வளவு மோசமான நிலையில் இருக்க மாட்டார்கள்."

இது கேட்ட அபூ உபைதா கூறினார்:

"நாங்கள் எல்லாரும் சமமானவர்கள். இங்கு அண்டான்-அடிமை வித்தியாசமில்லை. எல்லாரும் இறைவனின் அடிமைகளே. அது மட்டுமல்ல, உரிமைகளிலும் சம வாய்ப்பு உள்ளவர்களே!"

ஜோர்ஜ் திகைத்து நின்றார்.

அவர் மட்டுமல்ல, இந்தச் சமத்துவம் கண்டு சரித்திரமே திகைத்தது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு முத்திரையான கல்வி



எம்.வை.எப். சியாமா
மாவனல்லை

**எனது** அன்பின் தம்பி தங்கைகளே, கல்வியின் முக்கியத்துவத்தை நான் விளக்க முன் நீங்கள் யாவரும் அதனைப் பற்றி அறிந்தும் தெரிந்தும் இருக்கிறீர்கள். ஆயினும், அதன் பயனைப் புரிந்து கல்விக்குள்ளேயே தன்னைப் புகுத்திக் கொள்ளும் மாணவர்கள் இன்றைய சமுதாயத்தில் குறைவாகக் காணப்படுகிறார்கள். கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஓரிரு எழுத்துக்களில் விளக்குவது கடினமாகும். கல்வி பற்றி அறிஞர் அரிஸ்டோடில் பின்வருமாறு கூறினார்:

"கல்வி எனும் செடியின் வேர் கசப்பாகத் தோன்றலாம். ஆனால் அதன் பழம் இனிப்பானது."

இன்றைய உலகில் தோன்றிய அனைத்து மதங்களும் கல்வி கற்பதை ஆதரிக்கின்றன. அழிவிலாக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இஸ்லாம் கல்விக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தை சற்றுக் குறிப்பிடுவதனூடாக கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குவது யாவருக்கும் எளிமையாகப் புரியும் என்று நம்புகிறேன்.

"கல்வி கற்பது முஸ்லிமான ஆண்-பெண் இருபாலார் மீதும் கட்டாயக் கடமையாகும்."

"கற்பவனாக இரு. கற்றுக் கொடுப்பவனாக இரு. கற்பவனுக்கு உதவி செய்பவனாக இரு. நான்காமவனாக இராதே."

"யார் கல்வியைத் தேடிப் பயணிக்கிறாரோ அவருக்கு சுவனத்தின் பாதையை அல்லாஹ் எளிதாக்கி விடுகிறான்."

ஒரு மனிதர் மரணித்து விட்டால் அவரது 3 கருமங்களைத் தவிர ஏனைய அனைத்தும் முற்றுப் பெற்று விடுகின்றன. அவை;

1. நிலையான தர்மம்
2. பயனளிக்கும் கல்வி
3. அவருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளைகள்

மேலும், மறுமையில் எந்த ஒரு மனிதனும் நான்கு கேள்விகளுக்கு பதில் அளிக்காத வரை தன்னிடத்தை விட்டும் சிறிதேனும் நகர முடியாது.

1. தன் வாழ்க்கையை எவ்வாறு கழித்தான்?
2. தன் வாலிபத்தை எவ்வாறு பயன்படுத்தினான்?
3. தன் செல்வத்தை எவ்வாறு திரட்டினான், எவ்வாறு செலவிட்டான்?
4. தான் பெற்ற அறிவின் மூலம் எவ்வாறு செயற்பட்டான்?

இவை அனைத்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கருத்துக்களாகும். இங்கு மிகவும் உறுதியாக அறிவின் அவசியத்தை இஸ்லாம் சுட்டிக்காட்டி உள்ளது. அதாவது, தமது கல்வி அறிவை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று இப்புனித மார்க்கம் எதிர்பார்க்கிறது.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்று கூறியுள்ளார்.

அதாவது நாம் சிறப் பாகக் கற்க வேண்டும் என்றும் கற்றவற்றை செயற்படுத்த வேண்டும் என்றும் விளக்கவே திருவள்ளுவர் முனைகிறார்.

மேலும் பெண் புலவர்களுள் ஒருவரான ஔவையார், "இளமையில் கல்வி" என்று கூறியுள்ளார்.

கல்வி கற்பதற்கு வயதெல்லை கிடையாதுதான். என்றாலும் இளமையில் கற்கும் கல்வியே வாழ்க்கைக்கு அதிகமான பலனைத் தரும் என்பதே சான்றோரின் அறிவுரை ஆகும்.

எனவே, நாம் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அறிவுக்கு முத்திரையான கல்வியைக் கற்றுப் பயன் பெறுவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

# கல்விப் பாடப் புறச் செயற்பாடுகளிலும் கவனம் தேவை

மாணவர்களின் முழுமையான ஆளுமை விருத்தியே கற்றல் செயன்முறையின் முக்கிய நோக்கமாகும். மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல அம்சங்களையும் பெற்றுக்கொள்வதோடு எதிர் கால நற்பிரஜைகளாக வர வேண்டும் என்பது ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மற்றோரின் பெரும் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பை நிறை வேற்றும் வகையிலேயே அரச, அரச சார் பற்ற கல்விசார் நிறுவனங்கள் தமது கல்வித்திட் டத்தை ஒழுங்கமைத்திருக்கின்றன.

ஒரு கல்விசார் நிறுவனத்தைப் பொறுத்தவரை அதன் பாடத்திட்டம் பிரதானமாக இரு அம்சங் களை உள்ளடக்கியிருக்கும்.

1. பாட ரீதியான செயற்பாடுகள்
2. பாடப் புறச் செயற்பாடுகள்

இவ்விரு அம்சங்களும் மாணவனின் அறிவு, ஆளுமை மற்றும் திறன் விருத்திக்கு அளப்பரிய பங்காற்றுகின்றன. அந்த வகையில் பாடப்புறச் செயற்பாடுகள் என்றால் என்ன; அதில் உள்ளடங் கும் அம்சங்கள், அவற்றினால் மாணவர்கள் எத்தகைய பயன்களைப் பெறுகின்றார்கள் என்ப வற்றை ஒரு மாணவன் அறிந்திருப்பது அவசிய மாகும்.

### பாடப் புறச் செயற்பாடு என்றால் என்ன?

பாடப் புறச் செயற்பாடுகள் என்பது, வழமை யான பாடத்திட்டத்துக்கு அப்பால் மேலதிகமாக, மாணவர்களின் ஆளுமை மற்றும் திறன் விருத்திக் காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் குறிக்கும்.

உதாரணமாக, நாடகம், விளையாட்டு என்பன பிரபல்யமான இரு பாடப் புறச் செயற்பாடுகளாகும்.

### பாடப் புறச் செயற்பாடுகளில் உள்ளடங்கும் அம்சங்கள்

- கூடைப்பந்து, Base ball, சுவட்டு நிகழ்ச்சிகள், ஜிம்னாஸ்டிக், உதைப்பந்து, கரப்பந்து, டென்னிஸ், பாரம் தூக்குதல், பனிச்சறுக்கல், ஹொக்கி, நீச்சல் மற்றும் இதுபோன்ற விளையாட்டு நிகழ்ச்சிகள்.
- மொழிவிருத்திக் கழகங்கள் (Language Clubs) சிங்களம், ஆங்கிலம், அரபு மற்றும் தமிழ்
- எழுத்தாளர் கழகம்
- சாரணர் கழகம்
- வானவியற் கழகம்
- விவாத அணி
- சதுரங்க அணி
- மாணவர் பாராளுமன்றம்
- பாடசாலை வானொலி அலைவரிசை
- பாடசாலைப் பத்திரிகை
- வருடாந்த சஞ்சிகைக் குழு
- சூழல் மற்றும் சுற்றாடல் கழகம்
- நாடகக் கழகம்
- இசை வாத்தியக் குழு
- புகைப்படக் கழகம்
- சன்மார்க்கக் கழகம்

இவை போன்று இன்னும் பல அம்சங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்குகின்றன.

இவ்வாறான பாடப் புறச் செயற்பாடுகளில் சில மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இன்னும் சிலர் ஆர்வம் காட்டுவதில்லை. சிலர் தமக்குப் பொருத்தமான அம்சங்களைத் தெரிவு செய்து பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். வேறு சிலர் தமக்குப் பொருத்தமற்ற அம்சங்களைத் தெரிவு செய்து தமது எதிர்காலத்தையே தொலைத்து விடுகின்றனர். இது விடயத்தில் மாணவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

பாடப்புறச் செயற்பாடுகள் மாணவர்களுக்கு பல சாதகங்களைக் கொண்டிருப்பதைப் போலவே சில சந்தர்ப்பங்களில் பாதகங்களையும் கொண்டிருக்கின்றன.

## சாதகங்கள்

ஏராளமான நன்மைகளைத் தாராளமாகப் பொதிந்துள்ள செயற்பாடுகளே பாடப் புறச் செயற்பாடுகள் எனலாம். விளையாட்டு நிகழ்ச்சிகளில் எத்தகைய நன்மைகள் காணப்படுகின்றன என்பதை சென்ற இதழ் விளக்கமாகப் பேசியது. அவை தவிர மாணவர்கள் தங்களுடை உடலியல், புத்தாக்கம் மற்றும் சமூகவியல் சார் உள்ளார்ந்த திறமை (potential) களைத் தேடியறிந்து கொள்ள பாடப்புறச் செயற்பாட்டில் உள்ளடங்கும் அம்சங்கள் உதவுகின்றன. தங்களுடைய தொழிற்துறை எது, எதிர்கால விருப்பங்கள் என்ன என்பதை இனங்கண்டுகொள்ள இவை துணைபுரிகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பாடப் புறச் செயற்பாடுகளுள் எந்தவொரு கழகத்திலும் பங்குபற்றும் ஒரு மாணவன் அக்கழகத்தின் தலைவனாக, செயலாளராக, பொருளாளராக அல்லது வேறு பொறுப்புக்கள் உள்ளவராக வர வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் அந்த மாணவன் தனது தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் குழுவாக இணைந்து பணிபுரியும் ஆற்றலை அதிகரித்துக் கொள்ளவும் பொறுப்புணர்ச்சி மற்றும் ஒழுக்கப் பண்புகளை விருத்தி செய்து கொள்ளவும் கற்றுக் கொள்கின்றான். தவிர, நேர முகாமைத்துவம், நுண் முகாமைத்துவம், பல இலக்குகளை அடைதல் போன்ற உயரிய திறன்களையும் பெற்றுக் கொள்கின்றான். நேர முகாமைத்துவம், புத்தாக்கத் திறன் விருத்திக்கு சாரணியர் போன்ற செயற்பாடுகள் மிக முக்கிய பங்காற்றுகின்றன.

**சிலர் தமக்குப் பொருத்தமான அம்சங்களைத் தெரிவு செய்து பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். வேறு சிலர் தமக்குப் பொருத்தமற்ற அம்சங்களைத் தெரிவு செய்து தமது எதிர்காலத்தையே தொலைத்து விடுகின்றனர். இது விடயத்தில் மாணவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.**

விவாதம், இதழியல், கட்டுரையாக்கம், சஞ்சிகை, பத்திரிகை, வானொலி போன்ற ஊடகத்துறை சார் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் ஒரு மாணவனுக்கு இப்பாடப் புறச்செயற்பாட்டில் உள்ளடங்கும் அம்சங்கள் வாய்ப்பளிக்கின்றன. இன்னும் கலைச் சிந்தனை, கலையார்வம் மற்றும் கலை இரசனை போன்றவற்றையும் இவ்வம்சங்கள் மாணவர்களிடையே வளர்த்து விடுகின்றன. இத்தகைய அம்சங்கள் பிற்கால சமூக வாழ்க்கையில் நெருக்கடி, பதகளிப்பு போன்ற உளவியல் சிக்கல்களின்றி வாழ்க்கையை நகர்த்திச் செல்ல பெரிதும் துணை செய்கின்றன.

## பாதகமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்கள்

1. பாடப்புறச் செயற்பாடுகளைத் தெரிவு செய்வதிலும் அவற்றைத் திறம்பட மேற்கொள்வதிலும் பெற்றோரின் அழுத்தத்தை மாணவர் கள் உணர்தல்.
2. மிகையான நிகழ்ச்சி நிரலின் (Over Scheduled) காரணமாக சில மாணவர்கள் சுமையை உணர்தல்.
3. மிகையான நிகழ்ச்சி நிரலுக்குட்பட்ட (Over Scheduled) மாணவர்கள் இறுக்கம், கவனக்கு விப்பின்மை, மன ஒருமைப்பாடின்மை போன்றவற்றை வகுப்பறையில் உணர்தல்.
4. பாடப்புறச் செயற்பாட்டில் அதிகமாக நேரத்தைச் செலவிடுவது கற்றலைப் பாதிக்கலாம்.
5. அதிக செலவினங்களை ஏற்படுத்தல். உதாரணமாக பாடசாலை உதைப் பந்தாட்டக் கழகத்தில் சேர விரும்பும் ஒரு மாணவனுக்கு பதிவுக் கட்டணம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடை, வெளியிடங்களுக்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை போன்ற காரணங்களால் ஏற்படக்கூடிய செலவு.

இத்தகைய பாதகமான சந்தர்ப்பங்கள் நீங்கலாக அமைகின்ற பாடப்புறச் செயற்பாடானது ஒரு மாணவனின் அறிவு, ஆளுமை, திறன் விருத்தி மற்றும் பண்பாட்டு விருத்தி என்பவற்றுக்குத் துணை செய்வதோடு அம்மாணவனின் சுய கௌரவம், சுயமதிப்பு மற்றும் சுயமரியாதை என்பவற்றின் வளர்ச்சிக்கும் பங்காற்றுகின்றன. சுய கௌரவமென்பது ஒரு மனிதனை தன்னம்பிக்கையோடு வழிநடத்திச் செல்ல உதவும் மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

பள்ளிப் பருவ மாணவ மணிகளே! உங்களுக்கு விருப்பமான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடப்புறச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதினூடாக மேற்கூறப்பட்ட திறன்களையும் பண்புகளையும் தமதாக்கிக் கொள்ள முயற்சியுங்கள். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது எப்போதும் ஞாபகத்தில் இருக்கட்டும். எத்தகைய செயல்களை மேற்கொள்ளும்போதும் உளத் தூய்மை, இறை கட்டளைகளுக்கும் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் போதனைகளுக்கும் முரணில்லாது பார்த்துக் கொள்ளும்போது அது நிறைவான பயனைப் பெற்றுத்தரும்.

---

# இன்றைக்காக மட்டும் வாழ்வேன்

**டாக்டர் ஆயிழ் அல்கர்னீ**

**உனது** இதயப் பலகையில் ஒரேயொரு வாசகத்தை மட்டும் எழுதிவைத்துக் கொள். அது இதுதான்:

"இன்றைய நாள்தான் உனக்குரியது"

நீ உறுதியான, கூர்மையான சிந்தனையுடன் போராடினால், "நான் இன்றைக்காக மட்டும் வாழ்வேன்" எனும் முடிவுக்கு உனது மனதை உன்னால் பணிய வைத்துவிட முடியும்.

அப்போது இன்றைய நாளின் ஒவ்வொரு வினாடியிலும் உன் இருப்பை உன்னால் கட்டமைத்துக் கொள்ள முடியும். உனது செயல்பாடுகளை மேம்படுத்தும் செயல்களில் ஈடுபட இயலும். அப்போது நீ கூறு:

இன்றைய நாளில் மட்டும் நான் கவனமாய் பேசுவேன். பிறருடைய மனதைப் புண்படுத்தும் சொற்களைப் பயன்படுத்த மாட்டேன். புறம் பேச மாட்டேன்.

இன்றைய தினத்திற்காக மட்டும் வாழ்வேன். இறைவனுக்குக் கட்டுப்பட்டு வாழ முயற்சிப்பேன். கடமையான தொழுகையையும் உபரித் தொழுகையையும் நல்ல முறையில் நிறைவேற்றுவேன். குர்ஆனை ஆராய்ந்து படிப்பேன். எனது புத்தகங்களைக் கவனமாகப் படிப்பேன். பயனுள்ளவற்றை மனனம் செய்வேன். பிற பயனுள்ள நூல்களையும் வாசிப்பேன்.

இன்றைக்காக மட்டும் எனது இதயத்தில் நல்லதை நாடுவேன். பெருமை, தற்பெருமை, பொறாமை, வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி, கெட்ட எண்ணம் ஆகிய முட்கள் மிகுந்த தீமை மரத்தை வேரோடு சாய்ப்பேன்.

இன்றைக்காக மட்டும் நான் வாழ்வேன். பிறருக்கு உதவுவேன்; நன்மை செய்வேன். உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்கச் செல்வேன். இறந்தவர்களின் இறுதி மரியாதையில் (ஜனாஸாவில்) கலந்து கொள்வேன். முகவரி தெரியாமல் தடுமாறுபவர்களுக்கு வழி காட்டுவேன். பசித்திருந்தோருக்கு உணவளிப்பேன். துன்பப்படுவோரின் துயரங்களைத் துடைப்பேன். அநீதியிழைக்கப்பட்டவர்களுக்காகப் போராடுவேன். பலவீனமானவர்களுக்காகப் பரிந்துரைப்பேன். சிரமப்படுவோருக்கு உதவுவேன். அறிஞர்களுக்கு மரியாதை செய்வேன். சிறுவர்களிடம் அன்பு காட்டுவேன். பெரியவர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்வேன்.

இன்றைக்காக மட்டும் நான் வாழப்போகிறேன். முடிந்து போன நேற்றே! சூரியனைப் போல நீயும் மறைந்து விடு. உனக்காக இனி நான் அழமாட்டேன். ஒரு வினாடியேனும் உன்னை நினைப்பேன் என ஒரு போதும் எண்ணாதே. ஏனெனில், எங்களிடமிருந்து நீ பிரிந்து விட்டாய்; புலம் பெயர்ந்து சென்றுவிட்டாய். இனி மீண்டும் நீ எங்களிடம் வர மாட்டாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10,11 தர மாணவர்களுக்கானது**

# விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## இரசாயன மாற்றங்கள் - தரம் 10

1. இரசாயனத் தாக்க வகைகளுள் பின்வரும் தாக்கங்கள் எவ்வகையைச் சேரும் என்பதை புள்ளிக் கோட்டில் எழுதுக.

I. $Mg + CuSo_4 \longrightarrow MgSO_4 + Cu$..........................

II. $NaOH + HCI \longrightarrow NaCI + H_2O$..........................

III. $H_2 + Cl_2 \longrightarrow 2HCI$..................................

IV. $2KNO_3 \longrightarrow 2KNO_2 + O_2$..........................

### எளிய மின்கலம் (இரசாயனக் கலம்)

ஐதான சல்பூரிக் அமிலத்தில் அமிழ்த்தப்பட்ட Cu, Zn தகடுகளுக்கிடையே மின்குமிழ் ஒன்றை அல்லது கடத்தியொன்றை இணைக்க மின்னோட்டம் பாயும். இங்கு இரசாயனச் செயற்பாட்டினால் மின் பிறப்பிக்கப்படுவதால் இது மின்கலம் எனப்படும்.


02. எளிய உவோற்றா மின்கலம் ஒன்றில் செப்பு, நாக தகடுகளில் நிகழும் தாக்கங்களுக்கான சமன்பாடுகளை எழுதுக.

செப்புத் தகடு: ............ நாகத் தகடு:............

### மின்பகுப்பு

- அயன் கரைசல் ஒன்றினூடாக மின்னோட்டத்தைச் செலுத்த அதன் அனோட்டிலும் கதோட்டிலும் நிகழும் மாற்றங்கள் மின் பகுப்பு எனப்படும்.
- மின்கலத்தின் நேர் முடிவிடத்துடன் இணைக்கப்படும் மின்வாய் அனோட்டு (+) எனப்படும். எதிர் முடிவிடத்துடன் இணைக்கப்படுவது கதோட்டு ஆகும்.
- அனோட்டாக காபன், பிளற்றினம் தவிர்ந்த வேறு எவ்வுலோகம் இருப்பினும் அது கரையும். இதன்போது நேரயன்களாக மாறும். கதோட்டாக எவ் உலோகம் இருப்பினும் அது கரையாது. அதில் கரைசலிலுள்ள நேரயன் மின்னிறக்கமடையும்.
- மின்பகுப்பு முறை மூலமாக மேற்பரப்பொன்றின் மீது உலோகம் ஒன்றைப் பூசுதல் மின் முலாமிடல் எனப்படும்.

03. செப்புச் சாவி ஒன்றிற்கு நிக்கல் முலாமிடப்படுவதைப் படம் காட்டுகிறது.




I. அனோட்டு எது?....... கதோட்டு எது? ........

II. அனோட்டில் நிகழும் தாக்க சமன்பாட்டை எழுதுக. ................

III. நிக்கல், செப்புத் தகடுகள் இரண்டையும் மின் கலத்துடன் நேர்மாறாக இணைக்கும்போது நிகழும் மாற்றம் யாது?

### உலோகங்களின் தாக்கக் கோலங்கள்

04. உலோகங்களை அவற்றின் தாக்குதிறன் குறைந்து செல்லும் ஒழுங்கில் வலம் நோக்கி கிடையாக ஒழுங்குபடுத்திய வரிசைத் தொடர் கீழே தரப்பட்டுள்ளது.

⟶ தாக்குதிறன் குறைந்து செல்லும் ஒழுங்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| K | Na | Ca | *x* | Al | *y* | Fe |
| Sn | Pb | Cu | *z* | Ag | Pt | Au |

I. புள்ளிக்கோட்டில் முறையே *x y z* என்பவற்றினால் காட்டப்பட்டிருக்கும் உலோகங்களை எழுதுக.

X:................ Y:................ Z:..................

II. தொழிற்பாட்டுத் தொடரை அமைப்பதற்கு அடிப்படையாக அமையக்கூடிய உலோகங்கள் காட்டும் மூன்று முக்கிய தாக்கங்களை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ............... 2. ............... 3. ...............

III. தொழிற்பாட்டுத் தொடரில் மூலகம் ஒன்றின் அமைவிற்கும் அதன் பிரித்தெடுப்பு முறைக்கும் தொடர்பு உண்டு. அவ்வகையில் மேலே x,y,z என்பவற்றினால் குறிப்பிடப்படும் உலோகங்கள் தூய நிலையில் பிரித்தெடுப்புச் செய்வதற்குப் பின்பற்றும் முறையினை எழுதுக.

X:.................. Y: .................. Z: ....................

IV. இயற்கையில் அலுமினியம் அடங்கியிருக்கும் உலோகத்தையும் அதிலிருந்து தூய அலுமினியம் பெறப்படும் முறையையும் எழுதுக.

உலோகத் தாது: ...... பிரித்தெடுப்பு முறை: ....


05. I. இரசாயனத் தாக்க வீதம் தங்கியுள்ள காரணிகளைக் குறிப்பிடுக.

II. பின்வரும் இரசாயனத் தாக்கங்களுக்குப் பயன்படும் ஊக்கியினை எழுதுக.

a. ஐதரசன் பரவொட்சைட்டின் பிரிகை. .............
b. மாஜரின் தயாரிப்பு. ................................

III. மனித உடலில் காணப்படும் நேர் ஊக்கியாகத் தொழிற்படும் உயிர் இரசாயன ஊக்கிக்கு வழங்கும் பெயர் யாது?

06. இரும்பு துருப்பிடித்தல் தொடர்பான பரிசோதனை ஒன்றில் ஏகார் ஊடகத்தினுள் வைக்கப்பட்ட இரும்பு ஆணிகளையும் அதனுடன் தொடுகையிலுள்ள வேறு உலோகங்களுடைய கீழ்வரும் படங்களில் தரப்பட்டுள்ளன.




I. A,B,C ஆகிய மூன்று ஏகார் ஊடகங்களிலும் தேவையான காட்டிகள், பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டிருப்பின் எவற்றில் நீல நிறம் தோன்றும்?

II. நீல நிறம் தோன்றுவதற்குக் காரணமான அயனையும் அதனைக் கண்டறியப் பயன்படுத்திய பதார்த்தத்தையும் எழுதுக.

III. எவற்றில் இரும்பு ஆணியைச் சூழ இளஞ் சிவப்பு நிறம் தோன்றுவதைக் காண முடியும்?

IV. இளஞ் சிவப்பு நிறத்தை ஏற்படுத்திய காட்டியையும் அதற்குக் காரணமான அயனையும் குறிப்பிடுக.

V. இவற்றில் இரும்பு ஆணியைத் துருப்பிடிக்க விடாது தடுக்கும் தியாக உலோகங்கள் எவையெனக் குறிப்பிடுக.

## தகனம்

07. மெழுகுதிரி தகனத்திற்குள்ளாகும்போது ஏற்படும் சுவாலையில் காணப்படும் பின்வரும் வலயங்களில் நிகழும் தாக்கங்களை எழுதுக.

I. இருள் வலயம் (குறைந்த வெப்பம்) ..........

II. ஒளிரும் வலயம் (ஓரளவு வெப்பம்) ..........

III. கட்புலனாகாத வலயம் (அதிக வெப்பம்) ...

08. எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்கள், எண்ணெய் வகைகள், கிறீஸ் என்பவற்றால் ஏற்படக்கூடிய தீயை அணைப்பதற்குப் பொருத்தமான இரு தீயணை கருவிகளைக் குறிப்பிடுக.

## கனியங்களும் பாறைகளும்

கனியம்: நிலையான கட்டமைப்புடைய, ஏகவினமான கேத்திர கணித வடிவமுடைய, பளிங்குருவான அசேதனப் பொருள் கனியம் ஆகும். உதாரணம்: காரீயம், வைரம், பொன், கல்சியம் காபனேற்று

பாறை: பல கனியங்கள் சேர்ந்த, நிலையான கட்டமைப்புடைய குறித்த கேத்திர கணித வடிவமைப்பற்ற பல்லின அசேதனப் பொருள் பாறை ஆகும்.

09. பின்வரும் இயல்புகளுக்குப் பொருத்தமான பாறை வகைகளையும் அதற்குரிய 2 உதாரணங்களையும் எழுதுக.

| இயல்புகள் | பாறை வகை | உ+ம் |
|---|---|---|
| 1. வன்மையாவை. வரிகளோ, படையமைப்போ அற்றவை. | | |
| 2. வன்மை குறைந்தவை. படையமைப்பு காணப்படும். | | |
| 3. ஓரளவு வன்மையானவை. படையமைப்பு அற்றவை. | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம்- 11 இரசாயனக் கைத்தொழில் (Industrial Chemistry)

### புவி வளம்

- சுண்ணாம்புக் கல்லில் உள்ள இரசாயனச் சேர்வை கல்சியம் காபனேற்று ஆகும். இது தொலமைற்று, மயோசின் சுண்ணப் படிவுகள், முருகைக் கல், சிப்பி ஓடுகள் என்பவற்றில் காணப்படுகின்றது.
- சுண்ணாம்பு சேர்வைகளை மூலப் பொருளாகக் கொண்ட கைத்தொழில்களாவன:

1. சுண்ணாம்புக் கல் ($CaCo_3$) : சீமெந்து உற்பத்தி
2. நீறாத சுண்ணாம்பு ($CaO$) : நீற்றுச் சுண்ணாம்பு உற்பத்தி, கண்ணாடி உற்பத்தி, கடதாசி தயாரிப்பு
3. நீறிய சுண்ணாம்பு ($Ca(OH)_2$) : வெளிற்றும் தூள் உற்பத்தி, சுண்ணாம்புக் கல் தயாரிப்பு

### சீமெந்து உற்பத்திச் செயன்முறை

சுண்ணக் கல், களிமண் (3:1) —(உலர்த்தி அரைத்து சுழலும் சூளையில் 1400- 1600$^{O\ C}$ வரை எரிதல்)→ கிளிங்கர் —(குளிர்தல், 2- 4% ஜிப்சம் சேர்த்து அரைத்தல்)→ சீமெந்து

01. (I) கிளிங்கரில் காணப்படும் இரசாயனச் சேர்வைகள் இரண்டினை எழுதுக.
(II) சீமெந்து தயாரிப்பில் ஜிப்சம் சேர்க்கப்படுவதன் நோக்கம் யாது?

02. இலங்கையில் உள்ள பாரம்பரிய சுண்ணாம்புச் சூளைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

### உப்புக் கைத்தொழில்

03. உப்பளங்களில் உப்பு உற்பத்திச் செயன்முறையின்போது பின்வரும் தொகுதிப் பாத்திகளில் வீழ்ப்படிவாக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்களை எழுதுக.
I. முதலாம் தொகுதி பாத்திகள் (2 மடங்கு செறிவு): ..............................................................
II. இரண்டாம் தொகுதி பாத்திகள் (4 மடங்கு செறிவு): ..............................................................
III. மூன்றாம் தொகுதி பாத்திகள் (10 மடங்கு செறிவு): ..............................................................

04. கறியுப்புடன் மக்னீசியம் குளோரைட்டு ($Mg\ CI_2$) மாசாகக் காணப்படுவதனால் ஏற்படும் இயல்புகள் இரண்டை எழுதுக. ..............................................................

05. கறியுப்புடன் பொற்றாசியம் அயடேற்று சேர்க்கப்பட்டு அயடீன் கலந்த உப்பு தயாரிக்கப்படுகின்றது.
I. இவ் உப்பைப் பயன்படுத்தும்போதும் களஞ்சியப்படுத்தும்போதும் கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
II. கறியுப்புடன் அயடீன் சேர்க்கப்படுவதன் முக்கியத்துவங்கள் எவை?

### கைத்தொழில் வாயுக்களின் உபயோகம்

06. பின்வரும் பயன்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் வாயுக்களை எழுதுக.
I. உணவுகளைப் பொதி செய்தல், வானூர்திகளின் டயரை நிரப்புதல், ஐதரசனின் தயாரிப்பு
II. செயற்கை இறப்பர் தயாரிப்பு, உலோகங்களை உருக்கி ஒட்டுதல், PVC தயாரிப்பு
III. நோயாளிகளுக்கு செயற்கைச் சுவாசம், உலோகங்களை உருக்கி இணைத்தல்

07. கல்சியம் காபைட்டிற்கு நீர் சேர்ப்பதன் மூலம் அசற்றலின் வாயு உருவாகும். இதன்போது நடைபெறும் தாக்கத்திற்கான இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

### தாவர மூலப் பொருட்கள் மூலமான கைத்தொழில்கள்

புளித்த பனை, தென்னங் கள்ளிலிருந்தும் சீனிக் கைத்தொழில் கழிவுகளிலிருந்தும் இலங்கையில் மதுசாரம் ($C_2H_5OH$) உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு உருவாகும் அற்ககோல் சில பற்றீரியாக்களினால் அசற்றிக்கமிலமாக மாற்றப்படுகின்றது. இதுவே வினாகிரி உற்பத்தியில் நடைபெறுகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஸ்ஹர் ஸகரிய்யா

# இஸாம் அல்அத்தார்

ஜிஹாத் என்பது அல்லாஹ்வின் எதிரிகளை போர்முனையில் எதிர்கொள்வது என்றே பலரும் எண்ணுகின்றனர். உண்மையில் ஜிஹாத் என்பது பரந்த விரிந்த கருத்துக்களைக் கொண்டது. அல்லாஹ்வின் மார்க்கம் மேலோங்குவதற்காக உழைப்பதும் அப்பாதையில் எதிர்ப்படும் சவால்களை பொறுத்துக் கொண்டு தனது பாதையில் ஸ்திரமாக இருப்பதுவும் ஜிஹாதின்பாற்பட்டதாகும். சில சமயம் முதலாவது வகை ஜிஹாதை விட இரண்டாம் வகையான ஜிஹாத் அதிகம் சிரமமானதாக இருக்கக் கூடும்.

இவ்வகையான ஒரு ஜிஹாதை மேற்கொண்ட ஒருவராகவே நாம் சிரியாவின் இஸ்லாமிய அழைப்பாளியாகவும் முன்னை நாள் சிரியாவின் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பின் தலைவராகவும் இருந்த இஸாம் அல்அத்தாரை நோக்குகின்றோம்.

உண்மையில் அவரது வாழ்க்கை பெரும் பெரும் சோதனைகளைக் கொண்டதாகவே அமைந்திருந்தது. அவர் தனது வாழ்வின் பெரும் பகுதியை நாடுகடத்தப்பட்ட நிலையிலேயே கழித்துள்ளார்.

மார்க்கத்திற்காக அதிகம் சேவையாற்றி அதற்காக சிறை சென்று, நாடுகடத்தப்பட்டு, பல்வேறு சோதனைகளை எதிர்கொண்ட ஒரு தந்தைக்கு மகனாக, இஸாம் அல்அத்தார் 1927 இல் பிறந்தார். இளம் வயதிலேயே அல்குர்ஆனை மனனம் செய்திருந்த இஸாம், அரபு மொழியில் பாண்டித்தியம் பெற்றவராகவும் செவிமடுப்பவரிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

## அலி தன்தாவியுடனான உறவு



இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் ஆளுமைகளுள் ஒருவராக அன்று கருதப்பட்ட அலி தன்தாவியுடன் மிக நெருக்கமான உறவை இஸாம் பேணி வந்துள்ளார். 1946 இல் டமஸ்கஸ் நகரில் இஸ்லாமிய அரபுக் கலாபீடம் ஆரம்பிக்கப்பட்ட போது சிறப்புச் சொற்பொழிவாற்ற அலிதன்தாவி அழைக்கப்பட்டிருந்தார். சொற்பொழி வின் பின்னர் கேள்வி நேரம் கொடுக்கப்பட்ட போது அலி தன்தாவியின் கருத்துக்கு மாற்றுக் கருத்து தெரிவிக்க இஸாம் எழுந்து நின்றதே இருவரது உறவுக்குமான ஆரம்பப்படியாக அமைந்தது. பின்னர் அலி தன்தாவி தனது மகள் பனான் தன்தாவியைத் இஸாமுக்கு திருமணம் செய்து கொடுத்து தனது உறவை மென்மேலும் பலப்படுத்திக் கொண்டார்.

## இஹ்வான்களுடனான தொடர்பு

சிரியாவில் இயங்கி வந்த இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பு மிகப் பெரும் மாநாடொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அந்த மாநாடே இஸாம் அல்அத்தார் அவர்களின் வாழ்வில் மிகப் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தி இஹ்வான்களுடன் தொடர்பு கொள்ள வழியேற்படுத்திக் கொடுத்தது. 1945இல், முஸ்தபா ஸிபாஇயின் வருகையுடன் இஹ்வான்கள் சிரியாவில் மிக வேகமாக எழுச்சியுற ஆரம்பித்தனர். இக்காலப் பிரிவிலேயே இஸாமுக்கும் முஸ்தபா ஸிபாஇக்கும் இடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டது.

சிரிய இஸ்லாமிய இயக்க இளைஞர்கள் மத்தியில் இஸாம் தனியான ஓர் இடத்தைப் பெற்றிருந்தார். அவர் மீது இயக்கம் கொண்டிருந்த அபரிமிதமான நம்பிக்கையின் காரணமாக மூத்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப வம்மிக்க ஊழியர்களுக்கு கொடுக்கப்ப டாத பல பொறுப்புக்கள்கூட இஸாமிடம் ஒப்படைக்கப்பட்டன. இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளில் இரு சாராருக்கும் மத்தியில் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் வாலிபர் இஸாம் வெற்றி கண்டார்.


இஸாம் ஓர் இயக்கவாதி என்ற வரையறைக் குள் மட்டும் நின்றுவிடாது இயக்கத்துடன் உடன்பட்ட, உடன்படாத அனைத்துத் தரப்பின ருடனும் நாட்டு நலனுக்காக நல்லுறவைப் பேணிவந்தார். ஓர் இஸ்லாமிய நல்லாட்சியை சிரியாவில் ஏற்படுத்துவதில் அவர்களின் ஒத்து ழைப்பு தவிர்க்க முடியாத ஓர் அம்சம் என இஸாம் கருதினார். எனவே சிரிய மக்களின் முழுமையாக ஆதரவைப் பெற்றுக் கொள்ள இஸாமால் முடிந்தது.

1951 இல், சர்வாதிகாரி ஷீஷிகலியின் ஆட்சிக் காலத்தில் அவரது ஆட்சிக்கெதிராக இஸாம் குரல் கொடுத்ததால் அரசின் கடுமையான சோதனை களை அவர் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அவரைக் கைது செய்யுமாறு அரசு உத்தரவிட்ட போது, அவரது ஆதரவாளர்களின் வேண்டுகோள் காரணமாக அவர் எகிப்துக்கு சென்றார்.

எகிப்தில் இஸாம் தங்கியிருந்த காலப்பிரிவில் எகிப்திய இஹ்வான்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இஹ்வான்களின் தலைவர் ஹஸன் ஹுழைபி, அப்துல் காதிர் அவ்தா, ஸய்யித் குதுப், பஷீர் இப்ராஹீம், மஹ்மூத் முஹம்மத் ஷாகிர், அப்துல் வஹ்ஹாப் அஸாம் போன்ற பெரும் பெரும் இஸ்லாமிய ஆளுமைகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இஸாமுக்கு எகிப்திலிருந்தபோது கிடைத்தது.

1954 இல், எகிப்திய இஹ்வான்களின் தலைவர் ஹுழைபி சிரியாவுக்கு சென்றபோது அவருக்கு வழிகாட்டியாக அவருடன் கூடச் செல்ல இஸாம் தெரிவு செய்யப்பட்டது இஸாமுக்கு இஹ்வான்க ளின் மத்தியில் காணப்பட்ட செல்வாக்கை எடுத்துக்காட்டுவதற்கான சான்றாகும். 1956 இல் முஸ்தபா ஸிபாஈ தனது உயர்கல்விக்காக ஐரோப்பா சென்றபோது அவரது பொறுப்புகளை சிரிய மண்ணிலிருந்து மேற்கொள்ளும் பொறுப்பு இஸாமிடம் ஒப்படைக்கப்பட்டது.

1964 இல் முஸ்தபா ஸிபாஈ மரணித்தபோது இஹ்வான்களின் தலைவராக இஸாம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இப்பொறுப்பை ஏற் கும்போதோ அல்லது அவரது பதவிக்காலத் திலோ (1964-1973 வரை) இஸாமிற்கு சிரியா விற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது.



## அழைப்புப் பணி முட்கள் பரப்பபட்ட பணி

### 1. நாட்டிற்குள் பிரவேசிக்கத் தடை

உண்மையில் அழைப்புப் பணி என்பது பஞ் சணை மெத்தைகள் விரிக்கப்பட்ட பணியல்ல முட்கள் பரப்பப்பட்ட பணி என்பதற்கு இஸாம் அல்அத்தார் உயிருடன் வாழ்பவர்களுள் சிறந்த உதாரணம். 1964 முதல் இஸாம் அல்அத்தார் தனது சொந்த நாட்டிற்குப் பிரவேசிக்கத் தடை செய்யப்பட்டிருந்தார். அது பற்றி இஸாம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்;

"உண்மையில் சிரியாவை விட்டு நான் விருப்பத்துடன் வெளியேறவில்லை. நாஸிரயின் புரட்சிக்குப் பின்னர் நான் இயக்கரீதியான பணிகளிலும் அரசியல், சமூக ரீதியான பணிகளி லும் உத்வேகத்துடன் செயற்பட்டு ஆட்சியை பகிரங்கமாக குத்பா மேடைகளில் விமர்சித்தேன். நான் வழமையாக குத்பா செய்யும் ஜாமிஆ மஸ் ஜித் பல்லாயிரக்கணக்கான மனிதர்களால் நிரம்பி வழிந்தது. சிரிய மக்களின் பூரண ஆதரவு எனக் கிருந்ததால் எனக்கெதிராக அரசால் பகிரங்கமாக குற்றச்சாட்டுகளை முன்வைக்கவோ, என்னைக் கைது செய்யவோ முடியவில்லை. நான் ஒரு முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்காவுக்குச் சென்று திரும்பும்போது சிரியாவிற்குள் பிரவே சிக்க எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதன் பின்னர் சிரியாவுக்கு திரும்ப நான் பல தடவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்தேன். ஹாபிழ் அல்அஸதின் காலம் வரை எனக்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப் பட்டே வந்தது.

### 2. படுகொலை முயற்சிகள்

நேரடியாக இஸாமை எதிர்க்க முடியாதளவு பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குடன் காணப் பட்டதால் அரசு நாட்டிற்குள்ளும் வெளியேயும் பல தடவை அவரைப் படுகொலை செய்ய முயற் சித்தது. சிரியாவில் இருந்தபோது இஸாமும் அவரது நண்பர் ஒருவரும் தனது மாமனார் அலி தன்தாவியின் வீட்டிற்கு ஒரு கலந்துரையாடலுக் காகச் சென்றனர். கலந்துரையாடல் மிக நீண்ட நேரம் நடைபெற்றதாலும், மனைவி பனானின தும் அவர்களது சகோதரிகளினதும் விருப்பத் திற்கு இணங்கவும் இருவரும் அன்று அவர்களது வீட்டில் தங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். இஸாம் தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கின்றார் என்றெண்ணிய அரசு அவரது வீட்டை தாக்கி அழித்தது. இதே போன்று பல படுகொலை முயற் சிகள் நடைபெற்றாலும் அவை யாவற்றிலிருந்தும் அவர் தப்பிக்க வேண்டும் என்பதே இறை விருப்பமாக இருந்தது.

### 3. பனானின் படுகொலை



பனான் அல்தன்தாவி

யெமனில் வாழ்ந்து கொண்டிருந்த காலப்பிரி வில் ஒரே வீட்டில் நிரந்தரமாக வசிக்க இஸா முக்கு அனுமதி மறுக்கப்பட்டது. காரணம் அப் பிரதேசத்தில் உள்ளவர்களை இஸாம் தனது சிந்தனைக்குட்படுத்தக்கூடும் என்பதே. இப்படி ஒரு வீட்டுக்கு குடியேற்றப்பட்டு சில நாட்களில் அந்த வீடு குண்டு வீசி தாக்கியழிக்கப்பட்டது. இத்தாக்குதலின் காரணமாக அவரது மனைவி ஷஹீதானாலும் இஸாமை அல்லாஹுத்தஆலா காப்பாற்றினான்.

இந்த வகையில் இஸாம் இஸ்லாமிய அழைப் புப் பணியில் எதிர்கொண்ட தடைகளை விவரிப் பின் இக்கட்டுரை மிக நீண்டதாக அமைந்து விடும். ஹாபிழ் அல்அஸதின் ஆட்சிக்காலப்பிரி விலேயே இஸாம் நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார். ■

## நீங்கள் என்னவாகப் போகிறீர்கள்?

**பொதுவாக** பெற்றோர்களும் பெரியவர் களும் படிக்கும் குழந்தைகளைப் பார்த்து, "எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்?" எனக் கேட்பது வழக்கம்.

அதுபோல அமெரிக்காவில் உள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர் ஒருநாள் பள்ளி மாணவர்க ளைப் பார்த்து, "நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்?" என்று கேட்க, ஒவ்வொருவராக சொல்ல ஆரம்பித்தார்கள். ஒரு மாணவன் "நான் டாக்டராக ஆவேன்" என்றான். ஒருவன் "வழக்கறிஞர் ஆவேன்" இன்னொருவன் "ஆராய்ச்சியாளன் ஆவேன்" என ஒவ்வொருவ ராக சொல்லிக் கொண்டே சென்றார்கள். இடையில் சுருட்டை முடியும் மெல்லிய உடலும் கொண்ட கறுப்பின மாணவன் ஒருவன் எழுந்து, "நான் வருங்காலத் தில் இந்த நாட்டின் அதிபர் ஆவேன்!" எனக் கூறினான். அவ்வளவு தான் அனைவரும் கேலியும் கிண்டலும் நிறைந்த பாணியில் அந்த மாணவனைப் பார்த்து சிரிக்கலானார்கள்.

ஆம்! வெள்ளையர்களை பெரும்பான்மை யாகக் கொண்ட ஒரு நாட்டில், இதற்கு முன் வெள்ளையர் அல்லாத ஒருவர் ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யப்படாத அந்த நாட்டில் "நான் அதிபர் ஆவேன்!" என்று கூறுவது நகைப்புக்குரிய ஒன்றாகத்தானே பார்க்கப்படும்!

காலங்கள் உருண்டோடின. எந்த மாணவனை கேலியும் கிண்டலுமாக நோக்கினார்களோ அந்த மாணவன் ஒரு நாள் அமெரிக்காவின் அதிபராக ஆகிவிட்டான்! ஆம், அவன் எந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென எண்ணி னானோ அதை அடைவதையே தன்னுடைய வாழ்வின் இலட்சியமாகக் கொண்டான். தொடர் முயற்சி மேற்கொண்டான்.

அரசியல் அறிவை தனது பாடமாக எடுத் துக் படித்தான். தன் குறிக்கோளை எட்டியே பிடித்து விட்டான். அந்த மாணவன வேறு யாரும் அல்ல. தற்போதைய அமெரிக்க அதிபர் 'பராக் ஹுசைன் ஒபாமா' தான்.

வலுவான இறைநம்பிக்கை, விடா முயற்சி, பொறுமை மற்றும் பிரார்த்தனை இவைதான் இலட்சியத்தை அடைவதற்கான படிக்கட்டு கள். நல்லதோர் இலட்சியம்தான் நல்வாழ்க்கை அமைத்துத் தரும். எனவே, என் இளம் தோழர் களே! இந்த சிறிய வயதில் நாம் எடுக்கும் முடி வும் இலட்சியமும்தான் நம் வாழ்க்கையை நிர்ணயிக்கப் போகிறது என்பதை நினைவில் கொள்வோம்.

நன்றி: இளம் பிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சாரம்



## தாயே


பத்து மாதம் சுமந்த தாயே
சிப்பிக்குள் முத்தாய்
உன் கருவறைக்குள் இருந்தேன்
இரத்தத்தை பாலாக்கி
நித்தம் தந்தாயே
தாயை மதிக்காத இளைஞரே கேளீர்
எத்தனை சிரமமும் பாராமல்
பத்து மாதம்
சுமந்த தாயை மதிக்காமல்
இருப்பதும் ஏனோ
உம் தாயை மதிப்பதே
நீர் சொர்க்கம்
செல்ல முதல் படி
உணர்வீரோ!

*எச்.எப். நிரோஷா, தரம்: 9*
*தி/ அஸ்ஸபா வித்தியாலயம்,*
*கந்தளாய்*

## என் இதயப் பூங்கா

"முஹாஸபா" எனும் வாயிலால்
என் உள்ளத்தை எட்டிப்
பார்த்தேன்.
"தக்வா" எனும் சாலையோ
பாழடைந்திருப்பதைக்
கண்டேன்
என் ஆயுதமான "அமல்"களில்
தூசு படிந்திருப்பதைக் கண்டேன்
என் "இக்லாஸ்" எனும்
கண்ணாடியில்
தெளிவின்மையைக் கண்டேன்
என் பெயரில் இருக்கும்
"ஸகீனா"வை
உள்ளத்தில் தேடிப் பார்த்தேன்
கிடைக்கவில்லை
ஓ! எந்தன் நெஞ்சமே
உன் யன்னல்களைத் திறந்துவிடு
இறை நினைவுகள் அதனைத்
திரையிட்டுக் கொள்ளட்டும்
"அல்குர்ஆன்" வசனங்களை மீட்டி விடு
உன் அறைகள் ஒளி வீசட்டும்
"இக்லாஸ்"ஐ உன் முற்றத்தில் வளரவிடு
ஈமான் உன்னுள் பூப்பூக்கட்டும்.
"அக்லாக்"கை உன்னுள் வளர்த்துக்
கொள்
அது உன் கறைகளை அகற்றிவிடும்
"புன்னகை"யுடன் தோழமை கொள்
அது "ஸப்ரை" உனக்கு வாரியளிக்கும்
என்னில் இழந்த "ஸகீனா"
உன்னில் பூப்பூக்கட்டும்...!

*உம்மு சராப், கிந்தோட்டை*



## வாழ்க்கை

வாழ்க்கை என்பது இறைவன்
வடிவமைத்த சித்திரம் - அதில்
இன்பமும் துன்பமும் அவன்
தீட்டிய வர்ணங்கள்

பாடலோடு படுக்கையும்
பாவத்தோடு விழிப்புமானது
எம் வாழ்க்கையடா
பெண்களின் கண்ணிய பர்தாவும்
இல்லையடா

தூணில்லாமல் படைத்தான் இறைவன்
வானத்தை உனக்காக - ஆனால்
நீயோ வாழ்க்கையின் தூணாக
அமைத்தாய் ஷைத்தானை

நபியின் வாரிசுகளே!
நயமாய் கேட்கிறேன் - ஏன்
இந்த மாற்றம் உமக்கு - ஏந்தல்
நபியின் வாழ்க்கையை
தொலைத்து விட்டு?

எச்.எம். பாஹிம்
அல் மஹ்ஜிய்யா அ.க., பொலன்னறுவ

## வெற்றியை நோக்கிப் புறப்படு

நாளை வெற்றி நமக்கே – இன்று
நல்லதை செய்தால் –
கண்டதைக்
கற்றுப் பண்டிதனாகு – பலரும்
பாரினில் உன்னை மதிப்பர்

உயிருக்கு மேலாக உண்மையை
நேசி – உலகுக்கு மேலான
உயர்வு உன்னைத் தேடி வரும்
அகிலத்துக்கு மேலாக அகரத்தை
நேசி – அமுதுக்கு மேலான
அறிவு உன்னைத் தேடி வரும்

ஐ.எப். ரிப்னா, தரம்: 8
பொ/அல் ஹிலால் ம.க.
தம்பாளை, பொலன்னறுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்


வினாப்பத்திரம் I



நேரம் 45 நிமிடம்


பின்வரும் அடைப்புக்களில் காணப்படும் முகங்களில் ஒன்று வேறுபட்டது. அதன் கீழ் கோடிடுக.

1




i. ii. iii.

2. வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.




i. ii. iii.

3.



i. ii. iii.

4.



i. ii. iii.

05. கற்றாழையின் இலையினுள்ளே காணப்படும் சதைப் பகுதியை எவ்வாறு அழைப்பர்?
i. சோறு ii. காய் iii. கனி

06. கசப்பு சுவையுடைய இலைகள் எவை?
i. வேம்பு, பாகல் ii. குறிஞ்சா, அகத்தி
iii. பாகல், திராட்சை

07. ஒரு வித்திலைத் தாவரம் எது?
i. மூங்கில் ii. வெண்டி iii. காசித்தும்பை

08. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?
i. முள் முருக்கு ii. நாவல் iii. அன்னா முன்னா

09. சுவட்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பது.
i. உயரம் பாய்தல், குண்டெறிதல், நீளம் பாய்தல்
ii. 100 m ஓட்டம், 200 m ஓட்டம்
iii. 400 m ஓட்டம், ஈட்டி எறிதல்


10. மைதான நிகழ்ச்சிகளைக் குறிப்பது.
i. ஈட்டி எறிதல், தட்டு எறிதல், நீளம் பாய்தல்
ii. 100m ஓட்டம், 800m ஓட்டம்
iii. 200m ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல்

11. சிகிரியா ஓவியத்திலுள்ள பெண்கள் கையில் ஏந்தியுள்ள பொருள் எது?
i. தாமரைப் பூ ii. அலரிப் பூ iii. நீரோற்பலம்

12. பின்வரும் குறியீடுகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.
(பெற்றோல் நிரப்பு நிலையம், நீதிமன்றம் அருகில், பாதை அருகில், புகையிரத நிலையத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி)





13 14 15 16


17. 

இங்கே காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கலை இனம் காண முடியும்? ..................

எண் கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க.




i. 46 ii. 35 iii. 38




i. 12 ii. 18 iii. 16

18. பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

பௌர்ணமி நிலவே
பௌர்ணமி நிலவே
இங்கே வாராய்
நீல வானில் உனக்கென்ன வேலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வாராய்
காலம் கடந்தால் தொலைந்திடுவாய்
இங்கே வாராய்
கண்டு நாங்கள் களித்திட
இங்கே வாராய்

19. பௌர்ணமி நிலவு என்பது.
i. மூன்றாம் பிறை ii. பூரண நிலவு
iii. பன்னிரெண்டாம் நாள் நிலவு

20. நீல வானில் உனக்கென்ன வேலை என்பது.
i. மேற்கோள் வாக்கியம் ii. ஏவல் வாக்கியம்
iii. வினா வாக்கியம்

21. காலம் கடந்தால் தொலைந்திடுவாய் என்பதில் நாம் விளங்கிக் கொள்வது.
i. பௌர்ணமி நாளை ii. அமாவாசை நாளை
iii. நல்ல நாளை

22. பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை பன்மைச் சொல்.
i. நிலவு ii. நாங்கள் iii. தொலைந்திடுவாய்

23. பாடலில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழி
i. நீல ii. நிலவு iii. வான்

சரியான தொகுதியைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | | |
|---|---|---|
| வெந்நீர்<br>முந்நூறு<br>தேநீர் | இளநீர்<br>கோர்வை<br>வியர்வை | நாகரிகம்<br>ஈர்கு<br>காய்ச்சல் |
| குஞ்சு<br>அணில்<br>கத்தும் | நிரை<br>ஆ<br>பால் | குரங்கு<br>மந்தி<br>அழும் |

26. மழை நாள் சம்பந்தமான சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. அதனை ஒழுங்குப் பிரகாரம் இலக்கமிடுக.

i. வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது. ☐
ii. இடி இடித்தது. ☐
iii. மழை சோ எனப் பொழிந்தது. ☐
iv. மின்னியது மின்னியது. ☐
v. திடீரென மேகம் கறுத்தது. ☐
vi.. கடுமையான வரட்சி நிலவியது. ☐

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.

27. CAMERA .................... 28. RADIO..................

பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

29. வாக்கிய ................. 30. ஹால் ...................

31. மிகச் சரியான வாக்கியத்துக்கு கோடிடுக.

i. புவிஈர்ப்பு விசையை நியூற்றன் கண்டறிந்தார்.
ii. முதலாவது ஒலிம்பிக் போட்டி ஏதென்ஸ் நகரில் நடைபெற்றது.
iii. விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசியை கண்டறிந்தவர் லூய் பாஸ்டர்.
iv. இவை அனைத்தும் சரியானது.

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

32. தொலைவிலிருந்து பார்க்கும்போது தெளிவாகத் தெரியும் நிறம் எது?
i. வெள்ளை ii. பச்சை iii. மஞ்சள்


33. நீரை வெப்பமேற்றும்போது நீராவியாக மாறுவதற்கு தேவையான வெப்பநிலையின் அளவு யாது?
i. 10 பாகை செல்சியஸ்
ii. 100 பாகை செல்சியஸ்
iii. 0 பாகை செல்சியஸ்

34. கந்தளாய் குளத்தை கட்டிய மன்னன் யார்?
i. பண்டுகாபயன் ii. தேவநம்பிய தீசன்
iii. 2ஆம் அக்போ மன்னன்

35. இலங்கையில் குடிசைக் கைத்தொழில் மேற்கொள்ளப்படும் தொழில் எது?
i. கமம் செய்தல் ii. நெசவுத் தொழில்
iii. மாணிக்கக்கல் பட்டயம் தீட்டுதல்


36. பிறரின் வீட்டில் குடியிருப்போர் மாதா மாதம் வீட்டுச் சொந்தக்காரருக்கு கொடுக்கும் பணம்.
i. வரி ii. அன்பளிப்பு iii. வாடகை

37. வெற்றிடத்துக்கு வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ் வட்டமிடுக.




i. 28 ii. 12 iii. 20

38.




i. 56 ii. 48 iii. 55

39. ஆங்கில சொற்கள் மூன்றிலும் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.

| MEAN | HAVE | WIND |
|---|---|---|
| 7 2 4 1 | 9 4 3 2 | 8 0 1 6 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் படி LAND எனும் சொல்லுக்கு சமமான இலக்கங்களைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

i. 8416 ii. 7316 iii. 5416

40. 3608 இற்குச் சமமான விடையை தெரிவு செய்க

i. (35x100)+(100x8) ii. (36x100)+(8x1) iii. (36x10)+(6x6)

கோடிட்ட சொல்லுக்கான ஒத்த கருத்தினைத் தெரிந்து கோடிடுக.

41. யமுனா சிங்காரமான தோற்றத்தை உடையவள்.
i. அழகான ii. கம்பீரமான iii. அவலட்சணமான

42. திக்குத்தெரியா காட்டில் சிறுவன் கைவிடப்பட்டான்.
i. பயங்கரமான ii. கொடிய iii. திசை

43. இலங்கைத் திருநாட்டில் நாம் வாழ்கின்றோம்.
i. பெரிய ii. சிறிய iii. இயற்கை அழகு

44. கலையும் பிணையும் ஆற்றங்கரையில் நின்றன. இங்கு கலையும் பிணையும் என்பது.
i. மான் கூட்டம்
ii. மானின் ஆணும் பெண்ணும்
iii. மானின் இளையது

45. பிழுக்கைகளைக் கண்ட விவசாயி இந்த இடத்தில்............ வாழ்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டான்.
i. யானைகள் ii. பூனைகள் iii. ஆடுகள்

46. ............ வேண்டாம் ........ வேண்டும் என மக்கள் ............ மல்க நின்றனர்.
i. கண்ணீர், தண்ணீர், பன்னீர்
ii. பன்னீர், தண்ணீர், கண்ணீர்
iii. தண்ணீர், கண்ணீர், பன்னீர்

47. குதிரை என்ற சொல்லில் இருந்து உருவாக்க முடியாத சொற்கூட்டம்
i. குரை, குதி. திரை
ii. குதி, குறை, திரை
iii.திரை, குதி, குறை

48. மட்குடம் என்பதைப் பிரித்து எழுதினால்
i. மற்+குடம் ii.மன்+குடம் iii. மண்+குடம்

49. கொடிய புலி புள்ளிமானை கௌவிப் பிடித்தது என்பதில் வினை அடைமொழி
i. களவி ii.கொடிய iii. புள்ளி

50. நீதிபதி குற்றவாளிக்கு எதிராக தீர்ப்பு வழங்கினார் என்பதில் உயர்திணைச் சொற்கள்.
i . தீர்ப்பு, நீதிபதி, வழங்கினார்
ii. வழங்கினார், குற்றவாளி, நீதிபதி
iii. தீர்ப்பு, எதிர், குற்றவாளி

## வினாப்பத்திரம் 01 விடைகள்

| | |
|---|---|
| 01. iii | 27. புகைப்படக் கருவி |
| 02. iii | 28. வானொலி |
| 03. iii | 29. வாக்கியம், வசனம் |
| 04. ii | 30. அரிசி |
| 05. i | 31. iv |
| 06. i | 32. iii |
| 07. i | 33. ii |
| 08. i | 34. iii |
| 09. ii | 35. ii |
| 10. iii | 36. iii |
| 11. iii | 37. ii |
| 12. நீதிமன்றம் | 38. iii |
| 13. பெற்றோல் நிலையம் | |
| 14. பாதை அருகில் | |
| 15. பொலிஸ் சோதனைச் சாவடி | |
| 16. நாற்பக்கல் | 39. iii |
| 17. ii | 40. i |
| 18. iii | 41. i |
| 19. ii | 42. iii |
| 20. iii | 43. iii |
| 21. ii | 44. ii |
| 22. ii | 45. iii |
| 23. i | 46. ii |
| 24. 1 | 47. ii |
| 25. ii | 48. iii |
| 26. iv, v, iv, ii, iii, i | 49. i |
| | 50. ii |

## தவறுக்கு வருந்துகிறோம்

சென்ற இதழில் மாணவர் அகரம் பகுதியில் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய பரீட்சை ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே. புஷ்பகுமார ஆவார். மேலும் எதிர்வரும் ஒலிம்பிக் 27வது அல்ல 30வது என்பதையும் தெரிவிப்பதோடு, ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் போன்று வானத்திற்கு உயர்த்தப்பட்ட நபி இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்) என்ற தகவல் தவறானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

வினாப்பத்திரம் II  நேரம் 1 மணி 15 நிமிடம்

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01. 10 mm + 200 mm +20 cm
i. 41 cm  ii. 221 cm  iii. 230 cm

02. 300 mm + 400 mm + 40 mm
i. 740 cm  ii. 740 mm  iii. 74 cm

03. 5 kg - 50 g
i. 250 kg  ii. 350 g  iii. 4950 g

04. 5km - 500 m
i. 450km  ii. 4500 km  iii. 4500 m

5. எல்லே போட்டி ஒன்றில் ஒரு குழுவில் எத்தனை பேர் ஆகக் கூடுதலாக பங்கு பெறலாம்?
i. 11 பேர்  ii. 16 பேர்  iii. 10 பேர்


06. கபடி போட்டியில் ஒரு குழுவில் ஆகக் கூடுதலாக பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை.
i. 6 பேர்  ii. 5 பேர்  iii. 7 பேர்

07. அம்பாறை பிரதேசம் அமைந்திருப்பது.
i. வடக்கு மாகாணம்  ii. தென் மாகாணம்
iii. கிழக்கு மாகாணம்

08. வெசாக் எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?
i. மே மாதம் ii. ஏப்ரல் மாதம் iii. ஜூன் மாதம்

09. பெரிய வெள்ளிக்கிழமை யாருடைய பெருநாள்?
i. பௌத்தர்கள் ii. தமிழர்கள் iii. கிறிஸ்தவர்கள்

10. சில நிமிடங்களேயேனும் நீர் இல்லாவிடில் உயிர் வாழ முடியாத பிராணி.
i. தவளை  ii. முதலை  iii. மீன்



11. நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவில்
i. 3/4 பகுதியிலும் கூட
ii. 1/2 பகுதியிலும் கூட
iii. 1/4 பகுதியிலும் கூட

**மிகப் பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| விகடகவி, பன்னிரண்டு, தேசிக விநாயகம் பிள்ளை, பாரதியார், பதினாறு |
|---|
| பனை, சாய்ந்தாடம்மா, கிட்டியடித்தல், வாழை |

12. ஆசிய ஜோதி என்ற பாடலை .................. என்பவர் பாடினார்.

13. எல்லே விளையாட்டில் ஆகக்கூடியது ............ பேர் விளையாடலாம்.

14. தெனாலி ராமன் ............................ களுள் ஒருவன்.

15. அதமருக்கு ஒப்பாக குறிப்பிடப்படும் மரம் ..........................................................

16. குழந்தை சற்று வளர்ந்ததும் பாடும் பாடல் ..........................................................

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைக்குக.**

17. சுமந்த - நெல்லினங்களும் - கதிர் - தலையசைத்து - எம்மைத் - வரவேற்கும் ..........................................................

18. வகுப்பாசிரியரை - பேசுகிறான் - சட்டம் - போலச் - இவன் ........................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்து தருக.**

19. மாந்தர் .............. 20. சூழ்ச்சி ...................

**பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து தருக.**

21. பழைமை ............... 22. இரகசியம் .............

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

23. முஹுனு ஹோதன்ன ...................................

24. மே பலன்ன ...........................................

பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| தரம் | பிரிவு | பெண் | ஆண் |
|---|---|---|---|
| 1 | 4 | 14 | 15 |
| 2 | 3 | 15 | 19 |
| 3 | 2 | 14 | 12 |
| 4 | 2 | 13 | 12 |

25. இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை ..........................................

26. தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் எத்தனை பேர்? ........................................

27. தரம் 3இல் கல்வி கற்கும் பெண் பிள்ளைளின் எண்ணிக்கை ........................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. புஸ்ரா 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி பிறந்தாள். 2012ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி அவளுடைய வயது.
.......... வருடம் .......... மாதம் .......... நாள்

29. 4 கொப்பியின் விலை ரூபா 250 ஆகும். 1 கொப்பியின் விலை ..............................................

சரியான விடையின் கீழ் கீறிடுக.

30. நீர் கொதிக்க வைக்கும்போது பாத்திரத்தின் உள்ளே வெள்ளையாகப் படிந்திருப்பது எது?
i. உப்பு ii. கல்சியம் iii. வெண்மண்

31. எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் வித்து.
i. தென்னை ii. பனை iii. நெல்லி

32. பசளிக் கீரையில் அதிகம் காணப்படுவது
i. புரதம் ii. அயடின் iii கனியச்சத்து

வேறுபட்ட சொல்லின் கீழ் கீறிடுக.

33. பூனை, சிங்கம், சிறுத்தை, முயல்

34. முள்ளங்கி, வற்றாளை, போஞ்சி, பீட்றூட்


35. பங்குனி, சித்திரை, வைகாசி, ஆவணி

பின்வரும் ஆங்கில வசனங்களுக்கான கருத்தை எழுதுக.

36. Blue kite.................. 37. Big key ......................

முதல் படத்துக்கு பொருத்தமான படத்தை மட்டும் கோடிடுக.

38.



39.



40.



சீனி மாவு கோப்பி

கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியம் அமைக்குக.

41. வேலை: ................. 42. வேளை: .................

43. மாமா நேற்று கதை சொன்னார் என்பதை நிகழ்கால வாக்கியமாக்குக. ............................

44. ............................ காலை விடாதே

இப்பழமொழியின் முன் வரியை எழுதுக.

45. உச்சி குளிர்தல் என்ற மரபுத் தொடருக்கான பொருளை எழுதுக. ...................................

46. நாடு பூராகவும் கடுமையான வரட்சி ஏற்படுமாயின் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்?
i. மண் சரிவு ஏற்படும்
ii. காட்டுத்தீ அபாயம் ஏற்படும்
iii. நில நடுக்கம் ஏற்படும்

47. ரூபா. 1000ஐ ரகுவும் ரவியும் பங்கிட்டுக் கொண்டனர். ரகுவுக்கு கிடைத்த பணம், ரவிக்குக் கிடைத்த பணத்திலும் ரூபா150 அதிகமாகும். ரவிக்கு கிடைத்த பணம் எவ்வளவு?
i. ரூபா. 525 ii. ரூபா. 575 iii. ரூபா. 550


48. கீழே உள்ள எண் கோலங்களை விளங்கி... எனக் குறி இடப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான எண்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 5 | 10 | 2 | 20 |
| 6 | 6 | 12 | 4 | 48 |
| 8 | 6 | ... | 5 | ... |

49. இலங்கையின் தேசிய இலச்சினையில் காணப்படும் தர்மச் சக்கரத்தைக் குறிப்பது.
i. வீரம் ii. தர்மமும் நீதியும்
iii நேர்மையான ஆட்சி

50. சந்தையில் சில சந்தர்ப்பங்களில் மாம்பழங்களின் விலை மலிவாகக் காணப்பட காரணம்.
i. மாம்பழங்களை மக்கள் விரும்பி உண்பதால்
ii. மாம்பழங்களில் உற்பத்தி அதிகரித்தமையால்
iii. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதனால்

51. தரப்பட்ட உருக்களில் அடுத்து வர வேண்டிய உருவை தரப்பட்ட உருவில் இருந்து தெரிவு செய்து கோடிடுக.



52. கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ளும் இடம்.
i. பொலிஸ் நிலையம்
ii. ஆட்பதிவுத் திணைக்களம்
iii. குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. ...............
இலக்கம் 9,
பிரதான வீதி,
வவுனியா.
54. ...........

அன்பு 55. ...............................

நான் நலம் நாடுவதும் அதுவே நீ கேட்டிருந்த புத்தகங்கள் யாவற்றையும் வாங்கிவிட்டேன். அவைகளை மாமா வவுனியாவில் இருந்து புறப்படும்போது கொடுத்து விடுகிறேன். பெற்றுக்கொள். நான் இன்னும் மூன்று மாதங்கள் கழித்துதான் கிளிநொச்சிக்கு வருவேன்.

நன்றி,

இவ்வண்ணம்,
அன்பு அண்ணன்,
ப. கிருபாகரன்

**53,54,55 ஆவது வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

56. புத்தகங்கள் வாங்குபவர் யார்? ......................
57. புத்தகங்கள் யாரிடம் கொடுத்து அனுப்பப்பட இருப்பதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது? ......................
58. புத்தகங்கள் எந்த ஊருக்கு அனுப்பபட இருக்கிறது? ......................

இயற்கை வளமிக்க இலங்கை நாடு என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம். எழுவாய், பயனிலை போன்றன பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

59. ......................
60. ......................
61. ......................

## வினாப்பத்திரம் II விடைகள்

01. i
02. iii
03. iii
04. iii
05. ii
06. iii
07. iii
08. i
09. iii
10. iii
11. iii
12. தேசிய விநாயகம் பிள்ளை
13. 16
14. விகடகவி
15. வாழை
16. சாய்ந்தாடம்மா
17. கதிர்சுமந்த நெல்லினங்களும் எம்மைத் தலைசாய்த்து வரவேற்கும்
18. இவன் வகுப்பாசிரியரைப் போலச் சட்டம் பேசுகிறான்
19. மக்கள், மனிதர்
20. தந்திரம்/உபாயம்
21. புதுமை
22. பரகசியம்
23. முகம் கழுவு
24. இங்கு பார்
25. 320
26. 116
27. 52
28. 6 வருடம் 11 மாதம் 05 நாள்
29. ரூபா. 62.50
30. ii
31. i
32. iii
33. முயல்
34. போஞ்சி
35. ஆவணி
36. நீலப் பட்டம்
37. பெரிய திறப்பு
38. வாள்
39. அங்குல்ம்
40. கோப்பிக் கொட்டை
41. பொருத்தமான வாக்கியங்கள்
42. பொருத்தமான வாக்கியங்கள்
43. மாமா இன்று கதை சொல்கிறார்
44. ஆழம் அறியாமல்
45. மிக மகிழ்தல்
46. 2
47. 3
48. 14, 70
49. 2
50. 2
51. 2
52. ர்
53. ப. கிருபாகரன்
54. திகதி
55. தம்பி
56. அண்ணன்/கிருபாகரன்
57. மாமா
58. கிளிநொச்சி



ஒரு மனிதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஏறிச் செல்ல ஒரு வாகனம் கேட்டார். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், உம்மை ஒட்டகக் குட்டியின் மீது ஏற்றிவிடுகிறேன்! என்றார்கள். அதற்கு அம்மனிதர், ஒட்டகக் குட்டியை நான் என்ன செய்வேன் அல்லாஹ்வின் தூதரே! என்றார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், எந்த ஒட்டகமும் (தாய்) ஒட்டகத்தின் குட்டிதானே! என்றார்கள்.

(அத்திர்மிதி, அபூதாவூத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கவனக் குவிப்பு

எமது வேலைகளில் நாம் நூறு வீதம் கவனம் செலுத்தி செயற்பட முடியுமானால் எம்மால் இலகுவாக வெற்றிவாகை சூட முடியும். மனதை ஒருமுகப்படுத்தி, குறித்த அந்த வேலையிலேயே மனதை லயிக்கச் செய்து, ஏனைய விடயங்கள் எம்மைக் குறுக்கிடாதவாறு கவனித்துக் கொள்கின்றபோது எம்மால் தோல்விகளைக் குறைத்து வெற்றிக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்துக் கொள்ள முடியும். வெற்றிவாகை சூடியவர்கள் இவ்வாறுதான் மனதை ஒருமுகப்படுத்தி, மனதை ஒருவித கட்டுக்கோப்பில் வைத்திருப்பர். மனம் அத்தகைய ஒரு நிலையில் இருக்கின்றபோது வெற்றி என்ற இலக்கு இலகுவாக எட்டப்படும்.

மனதுக்கு தொடர்ந்தேர்ச்சியாக குறித்த வேலை தொடர்பான கட்டளைகளை இடும்போது மனம் அந்தக் கட்டளைகளுக்கு செவிமடுக்கத் தொடங்கும்; கட்டுப்படும்; அதன்படி பணியாற்றும். வெற்றி வெற்றி என எப்போதும் அதே சிந்தனையில் இருப்பவர்களை வெற்றி வந்தடைகிறது.

மனம் இவ்வாறு ஒரு கன்டிஷனில் இருக்கும்போது புதிய புதிய ஐடியாக்கள் தோன்றும். இந்த கவனக் குவிப்பு எனும் உத்தியைக் கையாண்டு பல மகத்தான சாதனைகளை அடைந்தவர்கள் பலர். தொடர் தோல்விகளைக் கண்டுகொள்ளாமல் வெற்றியை நோக்கிப் பயணிக்க இந்தக் கவனக் குவிப்பு உதவும். வேலைகளில் தவறிவிடாமல் கனகச்சிதமாக செயற்பட கவனக் குவிப்பு துணை செய்யும்.

பணிகளை வினைத்திறனும் விளைதிறனும் மிக்கதாக அமைத்து விரயங்களைக் குறைத்து சிறப்பாகப் பணியாற்ற கவனக் குவிப்பு சிறந்த வழியாகும். இவ்வாறு கவனக் குவிப்புடன் செயற்படுகின்றபோது எமது முயற்சிகள் ஒருங்கிணைக்கப்படும்.

உங்கள் மனதை ஒருமுகப்படுத்தி குறிப்பிட்ட இலக்கில் மனதைக் குவியுங்கள். அந்த இலக்கைக் காணும்வரை கண் மூடி தியானம் செய்யுங்கள். நிச்சயமாக அதனை அடைவதாகவும் வெற்றி பெறுவதாகவும் கற்பனை பண்ணுங்கள்.

மிகச் சிறந்த பேச்சாளர் ஒருவர் பேச ஆரம்பிக்கும்போது கண்ணை மூடிக் கொண்டுதான் பேசுவார். அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டபோது கூறினார்:

"அப்படி கண்ணை மூடி மனதை ஒருமுகப் படுத்திக் கொண்டால்தான் என் ஆழ்மனதிலிருந்து உதிக்கும் எண்ணங்களைக் கவனமாகக் கிரகித்து சிறப்பாகப் பேச முடியும்."

இப்படி மனதை ஒரு விடயத்தில் குவியச் செய்கின்றபோது சிறந்த பயன்களை அதிலிருந்து பெற முடியும். அமெரிக்காவில் பொருளாதார நிபுணர் ஒருவர் முதலீடு சம்பந்தமான முக்கிய முடிவுகளை எடுக்க முன்னர் மூன்று நிமிடங்கள் கண்களை மூடி யோசித்த பிறகுதான் முடிவெடுப்பார். அது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது கூறினார்:

"என் கண்களை மூடிக் கொண்டால் என் ஆழ்மன அறிவு யோசனை செய்து அற்புதமான முடிவுகளைச் சொல்லும்."

மனதை ஒருமுகப்படுத்தி செயற்படும்போது எமது ஆழ்மனதும் அற்புதமாக இயங்குவதால் சிறந்த அடைவுகளைப் பெற எம்மாலும் முடியுமாக இருக்கும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்




ஏ.எம். பயாஸா பேகம்,
தரம்: 08,
பொ/அல்ஹிலால் ம.க, தம்பாளை



எம்.ஆர். ஸஹ்னாஸ்
தரம்: 08
பொ/ அல்றிபாய் ம.வி, தம்பாளை



எம்.எப். மின்ஹா,
தரம்: 8
பொ/ அல்ஹிலால் ம.க, தம்பாளை




எச்.கே.எம். வலீத் ஹசன், தரம்: 05
கமு/ அஸ்ஸபா வித்தியாலயம்,
நிந்தவூர்



எம்.சீ.எப். ஹஸீனா,
தரம்: 08
பொ/ அல்ஹிலால் ம.க, தம்பாளை



ஏ. ரிபாஸ்தீன்,
தி/ கிண்/ மு.ம.வி
முள்ளிபொத்தனை




ஏ.எப். ஷம்லா, தரம்: 07
கமு/ புலவர்மணி ஷரிபுத்தீன்
வித்தியாலயம்,பெரிய நீலாவணை



எச்.எம். ஷஹீகா
தரம்: 08
பொ/ அல்ஹிலால் ம.க, தம்பாளை




எம்.எம். நஹ்லா,
தரம்: 05,
க/ அல்மனார் தே.பா, ஹந்தஸ்ஸ





கே.எம். அக்ரம்
அந்நஜாஹ் அரபுக் கல்லூரி
கந்தளாய்





ஏ.எச். வஜீஹா பேகம், தரம்: 07
கமு/ புலவர்மணி ஷரீபுத்தீன்
வித்தியாலயம், பெரிய நீலாவணை





ஜே. பஹத்



எம்.ஆர்.எப். அஸ்கா,
தரம்: 07
பு/ பாத்திமா முஸ்லிம் பெ. க




ஏ.கே.எப். நஸ்தி மர்வா,
தரம்: 05,
ஸைனப் மு.ம.வி, புத்தளம்




எம்.எப். ஹமாஸ் அஹமட்,
அமீனியா அரபுக் கல்லூரி,
நீகவரிய

**அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு: இப்தார் - இறுதித் திகதி: 25.07.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணாக்கரே...!

**உங்கள் அறிவுக்கு விருந்தளிக்கும் சிறுவர் கலைக்களஞ்சியம் வெளிவந்துவிட்டது.**

# ஆஃபாக்

## சிறுவர் கலைக்களஞ்சியம்

அரபு, ஆங்கிலம், உருது, ஜேர்மன், நோர்வே ஆகிய மொழிகளில் சர்வதேசத்தில் பிரபலம் பெற்ற ஆஃபாக் சிறுவர் கலைக்களஞ்சியம் இப்போது தமிழில்...

***சர்வதேச தரத்தில் உலகம் தழுவிய தகவல்களை உங்கள் கைகளிலும் சிந்தனையிலும் தவழச் செய்ய இன்றே வாசியுங்கள்...***

**AFAQ சிறுவர் கலைக்களஞ்சியம்**

- ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொரு தனித் தலைப்பு
- முழுமையான தகவல்கள்...
- தரமான தாளில்... 8 பக்கங்களில்...
- தரமான அச்சுப் பதிப்பு...
- எளிய தமிழ்...
- பல்வர்ண சித்திரங்கள்...




**விலை ரூபா 50.00 மட்டுமே**

கிடைக்குமிடங்கள்:

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road,
Colombo - 09

**JMF**
77, Dematagoda Road,
Colombo 09, Tel: 011 2698771, 0777412561

**மேலதிக தொடர்புகளுக்கு: T. Musthaq - 0777 396 306**

INSIGHT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org